விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 25 சனிக்கிழமை (12.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

வல்லிபுர ஆழ்வாருக்கு
## இன்று தேர்

(கரணவாய்)

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் இடம்பெறும்.

அதிகாலை 5 மணியளவில் பூசைகள் ஆரம்பமாகி காலை 7 மணியளவில் 23

## அனைத்து மக்களுக்கும் சமமான உரிமை; சிறுபான்மை என விளிப்பதையே விரும்பவில்லை

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் சமமான உரிமையை ஏற்படுத்துவதே எனது இலக்கு என ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறுபான்மை இனம் என விளிப்பதைக் 23

# எல்பிட்டிய பிரதேச சபையில் மலர்ந்தது தாமரை மொட்டு

### பெரமுன 17, ஐ.தே.க 7, ஐ.ம.சு.கூ 3, ஜே.வி.பி 2

(கொழும்பு)

**எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் மகிந்தவின் பொதுஜன பெரமுன அபார வெற்றி பெற்று எல்பிட்டிய பிரதேச சபையைக் கைப்பற்றியுள்ளது.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 23,372 வாக்குகள் பெற்று 17 உறுப்பினர்களைத் தனதாக்கியது.

ஐக்கிய தேசியக் கட்சி 10,113 வாக்குகள் பெற்று 7 உறுப்பினர்களை பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 5,273 வாக்குகள் பெற்று 3 உறுப்பினர்களை தனதாக்கியுள் ளது.

மக்கள் விடுதலை முன்னணி 2,435 வாக்குகள் பெற்று 2 உறுப்பினர்களை பெற்றுள்ளதுடன். ஜனநாயக தேசிய ஐக்கிய முன்னணி 310 வாக்குகளை மாத்திரம் பெற்றதால் உறுப்பினர் கள் தெரிவு செய்யப்படவில்லை. (ம-3)

வவுனியாவில்
## வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா - கொக்குவெளி பகுதியில் வசித்து வந்த வயோதிப பெண்ணொருவர் காணாமல் போயிருந்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

பேயாடி, கூழாங்குளம் இராணுவ முகாமிற்கு பின்புறமாக உள்ள குளப் 23

தீக்காயங்களுக்குள்ளான
## குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் ஜின்னா வீதியைச் சேர்ந்த முகமது ஹரிப் முஸ்கா (வயது-29) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்த வராவார். 23

## கோத்தாவிடம் தமிழ்க் கட்சிகள் ஒப்படைத்த பட்டியல் விபரம்

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் பங்காளிக்கட்சிகளாக உள்ள தமிழ்த் தரப்புக்கள் விரைவில் ஒன்று சேர்ந்து, ஆவணமொன்றில் கைச்சாத்திட்டு, பெரமுனவிடம் வழங்க வுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டே அந்த ஆவணம் வழங்கப்படவுள்ளது.

ஈ.பி.டி.பி, அகில இலங்கை தமிழர் மகாசபை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய பதிவு செய்யப்பட்ட கட்சிகளும் உதய ராசா, பிரபா கணேசன், அருண் தம்பிமுத்து, வரதர் தரப்பும் இணைந்து இதில் கையொப்பமிடவுள்ளனர். 23

விசுவமடு கூட்டு பாலியல் துஷ்பிரயோக வழக்கு
## குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட மூன்று இராணுவத்தினரும் விடுதலை

(கொழும்பு)

விசுவமடு கூட்டுப் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு, சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மூன்று இராணுவத்தினரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே குறித்த குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர்களை விடுவித்து விடுதலை செய்வதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2010ஆம் ஆண்டு விசுவமடு பகுதியில் 23

தருமபுரத்தில்
## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

இருவர் கைது

(கிளிநொச்சி)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு இரட்டைப் பனைகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரி கின்சிலி 23

## சென்னை - பலாலி இடையே வாரத்தில் 7 விமான சேவைகள்

(கொழும்பு)

சென்னையில் இருந்து பலாலிக்கு வாரத்துக்கு ஏழு விமான சேவைகளை நடத்துவதற்கு, எயர் இந்தியாவின் துணை நிறுவன மான, அலையன்ஸ் எயர் நிறுவனத்துக்கு இந்திய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

பலாலி விமான நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு, யாழ்ப்பாணம்சர்வதேச விமான நிலையமாக பெயரி 23

தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை
## பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பாராளு 23

## கோத்தாவின் வெற்றியைச் சிதைக்கவே 35 பேர் தேர்தலில் களமிறங்கியுள்ளனர்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த



(கொழும்பு)

கோத்தாபய ராஜபக்ஷவின் வாக்குகளை சிதைப்பதற்காகவே ஜனாதிபதி வேட்பாளர்கள் 35 பேர் இம்முறை தேர்தலில் களமிறங்கி யுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த 23

## இலங்கைக்கு எரிபொருள் விநியோகிக்கும் சிங்கப்பூர்

(கொழும்பு)

சிங்கப்பூரின் விட்டோல் ஆசியா இலங்கைக்கு எரிபொருட்களை விநியோகிக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளது.

1.5 பில்லியன் ரூபாய் பெறுமதியான இதற்கான உடன்படிக்கையின்படி குறித்த நிறுவனம் 2020 ஜூலை 14ஆம் திகதி முதல் இலங்கைக்கு 23

# பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் சில மணி நேரத்தில் மரணம்

## நெல்லியடியில் சம்பவம்

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சில மணி நேரத்துக்குள் மரணமடைந்தமை உறவினர் களிடையே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.


இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது தக்குசம்பாதி துன்னாலை மேற்கை சேர்ந்த ஜெயரட்ணம் ஜெயரூபன் (வயது-40) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையார் தனது மனைவியுடன் சண்டையிட்டதையடுத்து அவரது மனைவியால் கடந்த ஒன்பதாம் மாதம் ஐந்தாம் திகதி நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது.

ஆனால் மேற்படி நபர் தலைமறைவாகி இருந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வீட்டுக்கு சென்றதாக தெரிய வருகிறது இதனை அடுத்து அவரின் மனைவி நெல்லியடி பொலிஸாருக்கு கணவன் வந்த தகவலை தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நெல்லியடி பொலிஸார் தமது ஜீப் வண்டியில் செல்லாது புதியதொரு வாகனத்தில் சென்று அந்நபரை கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். கொண்டு சென்று சிறிது நேரத்தில் அவர் வாந்தி எடுத்ததை தொடர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில நிமிடத்தில் அவர் மரணமடைந்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-3.60)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. பரராசசிங்கம் சிறீசங்கர்**

(கிளி/ விநாசியோடை அ.த.க பாடசாலை பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர் B.A, PGDE)

04.10.2019 இல் தேசிய கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் **குரு பிரதீபா பிரபா** விருதினை பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியர்

**திரு. பரராசசிங்கம் சிறீசங்கர்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**வாழ்த்துபவர் :- சே.கஜேந்திரன்**

(C-7867)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி

**மலர்வு - 12.08.1955 உதிர்வு : 10.10.2019**



பள்ளம்புலம் சரவணையை பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில்கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி அவர்கள் 10.10.2019 வியாழக்கிழமை காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - பாலலோசனி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கமலபூரணத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நல்லையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் நல்லையா ஆனந்தசோதி அவர்களின் அன்பு மனைவியும் பிரகீசன், வானுஜி, கஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகஜன் அவர்களின் அன்பு மாமியாரும் ஸ்ரீவர்மனின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் நாகேஸ்வரி, சிவசோதி, இராஜேஸ்வரி, ஞானபண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாமஈஸ்வரி, திருவருட்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2019 ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சரவணை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.** (609)

**தகவல்: குடும்பத்தினர்**
T.P: 077 336 2640

## மரண அறிவித்தல்

### சரவணை வடிவேலு

**பிறப்பு - 09.11.1938 இறப்பு : 10.10.2019**



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு முகத்துவாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. சரவணை வடிவேலு அவர்கள் 10.10.2019 வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சத்தியதேவியின் அன்புக் கணவரும் ஜெயராஜ் (சுவிஸ்), சுகந்தி, பிரபா, சிறிதர் (பிரான்ஸ்), பிரதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜெகதீசன், தனுஷந்தி, கார்த்திகா, ஜமுனா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பெண்ணு தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கற்பகம், தெய்வானை, முருகேசு, சண்முகம், ஐயாதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபிகா, லக்ஷி, யுஷாளினி, கஜாளினி, ஆருஷன், யஸ்விந், ஆஜிஷ், ஜனீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அன்னாரது மகளின் (சுகந்தி) இல்லத்தில் (161/3, முகத்துவாரம் வீதி, கொழும்பு - 15) வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாதம்பிட்டி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல் - குடும்பத்தினர்.**

**கொழும்பு, முகத்துவாரம்.** (C-7869) **077 180 7420 / 077 257 7532**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி. சி.லதுமிதா



செல்வன். வி.ஜதுர்சன்



செல்வன். தி.ஹரிபிரசாத்

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்து (158 புள்ளிகள்) இன்றைய தினம் 10வது பிறந்த நாளைக் காணும் யா/ நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை மாணவன் செல்வன் தி.ஹரிபிரசாத் அவர்களையும் செல்வன் வி.ஜதுர்சன் (148 புள்ளிகள்) அவர்களையும்

யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி செல்வி சி.லதுமிதா (156 புள்ளிகள்) அவர்களையும் கல்வியில் மேன்மேலும் சிறப்புக்கள் பெற விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(C-7870)

**வாழ்த்துவோர் :- சிவஸ்ரீ.ந.சிவனேசக்குருக்கள் குடும்பம் (சிவம் ஐயா) (பேரன்) - அல்வாய்**

வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

Moving Money For Better
WESTERN UNION
MONEY TRANSFER
Money Master

**NEW AMBIGA STORES**
**நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்**

உள்நாட்டு, வெளிநாட்டு துரித பொதிகள் சேவை

இல.33, பிரதான வீதி, நெல்லியடி.

Mob- 0776679340
Tel-021 2263571
Fax – 021 226 4197
newambiga@gmail.com

(C-7871)

## திருமலை கடற்படை முகாமிலுள்ள

# கன்சைட் நிலத்தடி சித்திரவதை கூடத்தில் இளைஞர், யுவதிகள் சுட்டுப்படுகொலை!

## அதிர்ச்சித் தகவலை வெளியிட்டது சி.ஐ.டி.

### வசந்த கரன்னகொட மீது சந்தேகம்

(கொழும்பு)

**திருகோணமலை கடற்படை முகாமுக்குள் உள்ள கன்சைட் எனும் நிலத்தடி சித்திரவதை கூட வளாகத்தில் 18 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் பலர் அழைத்துவரப்பட்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதாக, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த ரஜீவ் நாகநாதன் எனும் மாணவன், அச்சித்திரவதை கூடத்தில் இருக்கும் போது தனது தாய்க்குத் தொலைபேசியில் தெரிவித்த விடயம் உண்மையே என நம்புவதற்கான சான்றுகள் உள்ளதாக சி.ஐ.டி. கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்கவுக்கு அறிவித்தது.**



கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட தமிழர்கள் 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூககொள்ளை விசாரணை அறை பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா இதனை விசேட விசாரணை அறிக்கை ஊடாக கோட்டை நீதவானுக்கு அறிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைகளில், கொழும்பு - சைத்திய வீதியில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் சட்டவிரோத சிறைச்சாலையாக ஒரு வதை முகாமும், திருமலை கடற்படை முகாமுக்குள் கன்சைட் எனும் நிலத்தடி சட்ட விரோத சிறை எனும் வதை முகாமும் செயற்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள சி.ஐ.டி. இது தொடர்பில் அப்போதைய கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட அறிந்து அல்லது அவரது ஆலோசனை பிரகாரம் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனச் சந்தேகம் எழுவதாக சி.ஐ.டி. விசாரணை அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

---

## இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்ட பிரம்படிப் படுகொலை நினைவேந்தல் இன்று

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிகாக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொக்குவில் பிரம்படிப் படுகொலை நினைவேந்தல் இன்று காலை 9.30 மணியளவில் ஆடியபாதம் வீதி பிரம்படிச் சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் அனுஷ்டிக்கப்படும். இலங்கையில் அமைதி காக்கவென வந்த இந்திய இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி குறித்த பகுதியில் பல பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

---

## நல்லூர் பிரதேச சபையால் மாட்டிறைச்சி விற்பனைத்தடை நீக்கம்

### 19 பேர் ஆதரவு; ஒருவர் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)


கடந்த வருடம் (2018) முதல் நடைமுறையில் இருந்த மாட்டிறைச்சி விற்பனைக்கான தடை நேற்று நல்லூர் பிரதேச சபையால் நீக்கப்பட்டது. நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மாட்டிறைச்சிக்கான தடையை 2018 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச சபை விதித்திருந்தது.

இந்நிலையில் எதிர்வரும் வருடத்திலிருந்து (2020) குறித்த தடையை நீக்குவதாக நேற்று இடம்பெற்ற நல்லூர் பிரதேச சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 19 பேர் வாக்களித்தனர், ஒருவர் எதிராக வாக்களித்தார். பிரதேச சபையில் குறித்த செயற்பாடானது மாட்டிறைச்சி உண்பவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பினும் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயம் இருப்பது பற்றி சபை அக்கறை கொள்ளவில்லை என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர். (இ-10)

---

## தேர்தல் குறித்து திறந்த மனதுடன் பேச்சு நடத்த கூட்டமைப்பு தயார்



(ஏறாவூர்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக திறந்த மனதுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளதாக அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாமாங்கத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---

## கோத்தாவுக்கு எதிரான வழக்கின் தடை டிசெம்பர் 20 வரை நீடிப்பு

(கொழும்பு)

டீ.ஏ. ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றில் இடம்பெறும் சாட்சி விசாரணையைத் தடுத்து பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.



அதேபோல், கோத்தபாய ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

கோத்தபாயவால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

அதன்படி, கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றில் இடம்பெறும் சாட்சி விசாரணைகளைத் தடுத்து முன்னர் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நீடிப்பதாக மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

இதேவேளை, கோத்தபாய உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

டீ.ஏ. ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய உள்ளிட்ட 07 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு நிரந்தர நீதாய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கை விசாரணை செய்வதற்கு நிரந்தர நீதாய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனத் தெரிவித்து கோத்தபாயவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனு அந்த நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

அவ்வாறு நிராகரிக்கப்பட்டமை சட்ட விரோதமானது எனத் தெரிவித்து கோத்தபாயவால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த மனுவை விசாரணை செய்ய அதிகாரம் இல்லை எனத் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்த மனுவை விசாரணைக்கு எடுக்காமல் நிராகரித்தது.

பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து கோத்தபாயவால் விசேட மேன்முறையீட்டு மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 2ஆவது டெஸ்டில் ஆரம்பத்திலேயே தென்னாபிரிக்க அணி தடுமாற்றம்




இந்தியாவுக்கு எதிரான 2வது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்கா அணி 3 விக்கெட்டுக்கு 36 ரன்கள் எடுத்துள்ளது.

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் விராட் கோலி பேட்டிங்கை தேர்வு செய்தார். மயங்க் அகர்வால் சதமடித்து 108 ரன்னிலும், புஜாரா 58 ரன்னிலும், ரகானே 59 ரன்னிலும், ஜடேஜா 91 ரன்னிலும் அவுட்டாகினர். விராட் கோலி இரட்டைச் சதமடித்து 254 ரன்னுடன் அவுட்டாகாமல் இருந்தார்.

இந்தியா 5 விக்கெட் இழப்புக்கு 601 ரன்கள் குவித்த நிலையில் தனது முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்தது.

தென்னாபிரிக்கா சார்பில் ரபாடா 3 விக்கெட்டும், மகராஜ், முத்துசாமி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

இதைத்தொடர்ந்து தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்சை விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக டீன் எல்கரும், மார்கிராமும் களமிறங்கினர்.

மொகமது ஷமி துல்லியமாக பந்து வீசி அசத்தினார். இவரது பந்துவீச்சில் மார்கிராம் டக் அவுட்டானார். எல்கர் 6 ரன்னிலும், பவுமா 8 ரன்னிலும் வெளியேறினர்.

இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் தென் ஆப்பிரிக்கா அணி 3 விக்கெட் இழப்புக்கு 36 ரன்கள் எடுத்துள்ளது. டி புருன் 20 ரன்னிலும், ஆன்ரிச் நோர்ஜே 2 ரன்னிலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

# இரட்டைச் சதத்தில் சச்சின், சேவாக்கின் சாதனைகளை முறியடித்தார் கோலி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததன் மூலம் சச்சின் டெண்டுல்கர் மற்றும் சேவாக் சாதனைகளை விராட் கோலி முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 வது டெஸ்ட் கிரிக்கெட் புனே நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 273 ரன்கள் எடுத்திருந்தது. கேப்டன்விராட கோலியும், ரகானேவும் களத்தில் இருந்தனர்.



இதையடுத்து இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. ரகானேவும் , கோலியும் ஆட்டத்தை தொடர்ந்தனர். நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய விராட் கோலி டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 26 வது சதத்தை பதிவு செய்தார். மதிய உணவு இடை வேளையின் போது இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 356 ரன்கள் எடுத்திருந்தது.

இதையடுத்து ரகானே 59 ரன்களில் ஆட்டமிழந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கேப்டன் விராட் கோலி டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தனது 7-வது இரட்டைச் சதத்தை பதிவு செய்தார். மேலும் 7 முறை இரட்டைச் சதம் அடிக்கும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றார். இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் விரேந்திர சேவாக் இருவரின் சாதனையையும் முறியடித்தார்.

டெஸ்ட், கிரிக்கெட் போட்டிகளில் சச்சின் மற்றும் சேவாக் இருவரும் முறையே தலா 6 இரட்டைச் சதங்கள் விளாசியுள்ளனர். சச்சின் டெண்டுல்கர் 200 டெஸ்ட் போட்டி களில் விளையாடி 6 இரட்டைச் சதங்களும், சேவாக் 104 டெஸ்ட் போட்டிகள் விளையாடி 6 இரட்டைச் சதங்களும் அடித்துள்ளனர்.

ஆனால் விராட் கோலி தனது 81-வது கோலி தனது 41 டெஸ்ட் போட்டிகள் வரை இரட்டைச் சதத்தை ருசிக்கவேயில்லை. ஆனால் அடுத்து விளையாடிய 41 போட்டிகளில் 7 இரட்டை சதங்கள் அடித்து வியக்க வைத்துள்ளார். இந்த 7 இரட்டைச் சதங்களுமே விராட் கோலி கேப்டனாக செயற்பட்ட போட்டிகளில் அடிக்கப்பட்டவை என்பது மற்றுமொரு சிறப்பு.

கேப்டனாக டெஸ்ட் போட்டிகளில் 150 ரன்களுக்கு மேல் அடித்தவர்கள் பட்டியலில் விராட் கோலி முதல் இடத்தில் உள்ளார். இதுவரை 9 முறை 150 ரன்களுக்கு மேல் அடித்துள்ள கோலி உலகின் சிறந்த பேட்ஸ்மேனான டான் பிராட்மேனை விடவும் முன்னிலையில் உள்ளார்.

சச்சின் மற்றும் சேவாக் 6 முறை, ராகுல் டிராவிட் 5 முறை, சுனில் கவாஸ்கர் 4 முறை மற்றும் புஜாரா 3 முறை இந்திய அணிக்காக இரட்டைச் சதமடித்துள்ளனர். உலக அளவில் ஆஸ்திரேலிய வீரரான டான் பிராட்மேன் 12 முறை இரட்டைச் சதமடித்து முதல் இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இறுதிக்குள் நுழைந்தது பார்படோஸ் அணி!

கரீபியன் பிரீமியர் லீக் ரி-20 தொடரின், இறுதிப் போட்டிக்கான இரண்டாவது தகுதி சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்று பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி, இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்துள்ளது.

ட்ரினிடெட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில், பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணியும், ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ஜோன்சன் சார்லஸ் 35 ஓட்டங்களையும், ரொய்மோன் ரெய்பர் மற்றும் ஆஷ்லி நெர்ஷ் ஆகியோர் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

# இறுதிக்குள் ஸிட்ஸிபாஸ்

மாஸ்டர்ஸ் அந்தஸ்து பெற்ற ஷங்ஹாய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர், தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

ஆண்களுக்கே உரித்தான இத்தொடரில், நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இரண்டாவது. காலிறுதிப் போட்டியில். கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், போட்டியில், உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாசுடன் மோதினர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியில், முதல் செட்டை 6-3 என நோவக் ஜோகோவிச், கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், ஆக்ரோஷமாக மீண்டெழுந்த ஸிட்ஸிபாஸ், செட்டை 7-5 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் பரபரப்படைந்தது.

இதில் ஆக்ரோஷம் கலந்த நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸிட்ஸிபாஸ், யாரும் எதிர்பாராத அளவு சிறப்பாக விளையாடி 6-3 என செட்டைக் கைப்பற்றி. உலகின் முதல்நிலை வீரரை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

# டெஸ்ட் பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலில் பெட் கம்மின்ஸ் முதலிடம்!



கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பாரத்துக் காத்திருந்த டெஸ்ட் பந்து வீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது.

அதன்படி, தற்போது ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நடைபெற்றுவருகின்றது.

இந்த நிலையில், ஐ.சி.சி.யின் டெஸ்ட் பந்து வீச்சார்களின் புதிய தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில், டெஸ்ட் பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலில், பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த பட்டியலில் முதல் பத்து இடங்களில் உள்ள வீரர்களின் விபரங்களை பார்க்கலாம்:

இந்த பட்டியலில், அவுஸ்ரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் பெட் கம்மின்ஸ், 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்.

தென்னாபிரிக்காவின் கார்கிஸோ ரபாடா, 828 புள்ளிகளுடன் தொடர்ந்தும் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா, 827 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் ஜேஸன் ஹோல்டர் 814 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்காவின் வெர்னொன் பிளெண்டர், 811 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்தின் ஜேம்ஸ் எண்டர்சன் 798 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.


நியூஸிலாந்தின் ட்ரெண்ட் போல்ட், 795 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்தின் நெய்ல் வாக்னர், 785 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தில் உள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் கெமார் ரோச் 780 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில், 8 விக்கெட்டுகள் கைப்பற்றிய இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் 4 இடங்கள் முன்னேறி பத்தாவது இடத்தை பிடித்துள்ளார்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



# யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதி
## மடத்தார்பதி சீரடிசாயி மந்திர் ஈழத்து சீரடி
## தேர்த்திருவிழா சிறப்பு மலர்-12.10.2019





### சீரடி சாயி பாபா தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 225 292
071 4546 960
227/6 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மருதடி அருகில்) 021 224 2022, 071 4546 956
216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777, 0777 100 444
94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732
36, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம். 021 222 6699, 076 722 5292
ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 4546 955
021 222 6688, 071 777 6969
021 224 3737, 071 4546 959
021 227 0700, 071 4546 957
021 300 6550, 071 4546 958

மலரமைப்பு: எஸ்.ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன்

New
V.M.K
JEWELLERY
வீ.எம்.கே. ஜுவல்லரி
Dealers in 22Kt.Gold Jewellery
V.M.K. Jewellery
22k Gold
No.: 80/30, Kasthuriar Road, Jaffna.
Tel : 021 222 2515, 021 720 1117, 0777 849 369
கிளை வி.எம்.கே. ஜுவல்லறி
கண்டி வீதி, சாவகச்சேரி
021 227 1616, 0777 849 369

கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
KEERTHIKA TEXTILES
தீபாவளியை இனிதாக கொண்டாட கைராசியான எமது புடைவை நிலையத்தில் இன்றே உங்களுக்குப் பிடித்த நவநாகரிகமான ஆடைகளை விலைக்கழிவுடன் வந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
& பேபிநீட்ஸ்
K.T.பெசன்
முற்றிலும் குளிரூட்டப்பட்ட மிகப் பிரமாண்டமான காட்சியறை.
ஒருமுறை வந்து பாருங்கள். நீங்களே பிரமித்துப் போவீர்கள்....
உங்கள் பணத்தினை காட் மூலமும் செலுத்தலாம்
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.
T.P:077 228 8245

NGC
Northern Group of Company
NGC இன் புதிய கிளை நாளை மறுதினம் திங்கட்கிழமை இல.381, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படுகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
இல.646 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 790 4574, 077 511 3914, 077 922 7102

ஐங்கரன் ஓட்டோர்ஸ்
ஆட்டோ உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்
ஐங்கரன் ஓட்டோர்ஸ்
இல. 70, பலாலி றோட், யாழ்ப்பாணம். TP:- 021 221 9116

# போர்க்குற்ற விசாரணைக்கான கோரிக்கையை முன்னெடுப்போம்

## எந்தக் கட்சியுடனும் சமரசம் இல்லை ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜி திட்டவட்டம்




(யாழ்ப்பாணம்)

26 வருடங்களாக சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கூறும் துணிவு யாருக்காவது உள்ளதா? என்று ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினார்.

யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

நாடு பூராகவும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளேன். பாதுகாப்புப் பிரச்சினைகள் உள்ளன. தெற்கில் காலி,மாத்தறை பிரதேசங்களில் தேர்தல் பிரசாரம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுமென நினைக்கின்றேன். உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டால், காலி, மாத்தறை மாவட்டங்களில் பிரசாரம் செய்யலாம்.

கொழும்பு, மலையகம், வடகிழக்கு உள்ளிட்ட பிரதேசங்களில் எமக்குக் கிடைக்கப்பெறும் வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டு தான், பிரசாரங்களில் ஈடுபட வேண்டியுள்ளது.

சாதிக்க முடியாமல் போகலாம், சாதிக்க முயற்சி எடுத்தவர்களாக மக்கள் மத்தியில் செயற்பட்டவனாக உயிரை விட வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் பிரதிநிதிகளை கைகோர்ப்பதற்கு, எனது நியமனம் வலுச் சேர்த்துள்ளது.

எந்தக் கட்சிகளுடனும் சர்வதேச விசாரணை மற்றும் போர்க்குற்ற விசாரணைகளுக்கான சமரசம் இல்லை. அது யாராக இருந்தாலும் போர்க்குற்ற விசாரணைக்கான கோரிக்கையை முன்னெடுப்போம். அதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர், சிறையிலுள்ள இராணுவத்தினரை திறந்துவிடப்போவதாக கோத்தபாய கூறுகின்றார். 26 வருடங்களாக சிறையிலுள்ள அரசியல் கைதிகளை திறந்துவிடச் சொல்லும் துணிவு யாருக்காவது உள்ளதா? என்றும் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினார்.

ஏன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், அமைச்சரவைப் பத்திரத்தைப் போட்டு, அரசியல் கைதிகளை விடுதலை செய்கின்றோம் என்று சொல்லலாமே?

இன்றைய சூழ்நிலைகளைப் பார்த்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ்ப் பிரிவு போன்று செயற்படுகின்றது. தேர்தலுக்கு அண்மித்த காலப்பகுதியில் சஜித் பிரேமதாஸவிற்கு வாக்களிக்கச் சொல்வார்கள்.

ஆகவே, எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# ஆறுமுகநாவலர் குருபூசை தின சைவ வினாவிடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவச்சிறார்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு நடத்தும் சைவ வினாவிடைப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை (13.10.2019) யாழ்.இந்துக்கல்லூரியிலும் கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையிலும் நடைபெறும்.

இப்பரீட்சை தரம் 1,2,3 இற்கு காலை 9 மணியளவிலும் தரம் 4,5,6 இற்கு முற்பகல் 10 மணியளவிலும் தரம் 7,8,9,10 இற்கு முற்பகல் 11 மணியளவிலும் இடம்பெறும். இப்பரீட்சைக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 500 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டன எனவும் பரீட்சார்த்திகள் குறித்த நேரங்களுக்கு சமுகம் தர வேண்டும் என சைவசமய அபிவிருத்திக்கழகப் பரீட்சை செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்தார். (இ)

# வேம்படி மகளிர் பாடசாலை மாணவி கட்டுரைப் போட்டியில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி ஆ.பவப்பிரியா முதலாமிடத்தைப் பெற்றார். (இ-2)

# நிர்மாண ஒப்பந்தங்கள்; யாழ்.மேல் நீதிமன்றிலும் வழக்குகள் தொடரலாம்

(யாழ்ப்பாணம்)

நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பிலான வழக்குகளை யாழ்.மேல் நீதிமன்றத்திலும் தொடரலாம் என நீதி அமைச்சால் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பிலான வழக்குகள் இதுவரை காலமும் கொழும்பு மேல் நீதிமன்றில் மாத்திரம் இடம் பெற்ற நிலையில் தற்போது யாழ். மேல் நீதிமன்றத்திலும் தொடர்வதற்கான வாய்ப்பை நீதி அமைச்சு வழங்கியுள்ளது. (இ-10)

# மாகாண மட்டப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

வலய மட்ட தேசிய இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) பேச்சு, குழுப்பாட்டு மற்றும் வாசிப்புப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அனைவரும் பாடசாலைச் சீருடையுடன் சமுகமளிக்குமாறு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் இரண்டாம் மொழிப் பிரிவிற்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்தார். (இ-2)

# அன்னதான மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் 12.5 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள அன்னதான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெறும்.

இதில் மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலக அதிகாரிகள், தெல்லிப்பழை பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (இ-10-108)

## இராசி பலன்

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மேடம்:** தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய முயற்சிகள் கைகூடும், பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த வேலைகள் தீரும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம் | | |
| சனி, கேது | குரு | சுக், புத | சூரி, செவ் |

12.10.2019
புரட்டாதி 25, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 1.18 மணிவரை
பூரட்டாதி காலை 6.50 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
நான்காம் புரட்டாதிச் சனி,
நடேசர் அபிஷேகம்

வளவன்

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் நாடி வரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், தலைமைப் பதவிகள் உங்களை நாடி வரலாம்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு. வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

# தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்களே தற்போது அவர்களின் நலன் குறித்துப் பேசுகின்றனர்



## மகிந்த அணி மீது வேலுகுமார் காட்டம்

(கண்டி)

**தமிழ் மக்களை கொத்துக்கொத்தாக கொன்று குவித்தவர்களே தற்போது தமிழர்களின் நலன் குறித்து பேசுவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் காட்டமாகத் தெரிவித்தார். வாக்கு வேட்டைக்காகப் பேரினவாதத்தையும் சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தையும் மட்டுமே முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்தும் கூட்டு எதிரணியின் (மகிந்த) பக்கம், அரசியல் கைக்கூலிகளாக சில தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் செயற்படுவது வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமென்றும் அவர் தெரிவித்தார்.**

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு திரட்டி கண்டியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக வழமைபோல் 'நல்லவர்கள்' வேடம் பூண்டு ராஜபக்ஷக்களும் அவர்களின் சகாக்களும் பல்வேறு உறுதிமொழிகளை வாரி வழங்கி வருகின்றனர்.

அவர்களின் வார்த்தை ஜாலங்களைக்கண்டு ஏமாந்து வாக்குகளை வாரி வழங்குவதற்கு தமிழ் பேசும் மக்கள் கொண்டை கட்டிய சீனர்கள் அல்லர் என்பதை ராஜபக்ஷ படையணி புரிந்துகொள்ள வேண்டும். தாங்கள் ராஜபக்ஷக்களுக்கு எதிரானவர்கள் என அடையாளப்படுத்திக்கொண்டு மறைமுகமாக கூட்டு எதிரணியை வலுப்படுத்துவதே சிலரின் உள்நோக்கமாகும்.

மறுபுறத்தில் தமிழ், முஸ்லிம் வாக்குகளை சிதறடிப்பதற்காக சிலர் வேண்டுமென்றே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். எனவே, வழமையைவிடவும் மக்கள் இம்முறை விழிப்பாகவே இருக்க வேண்டும். அதேபோல் தமிழ் மக்களை கொத்துக்கொத்தாகக் கொன்று குவித்தவர்கள் இன்று வடக்கில் அலுவலகங்களை திறந்து, தாங்கள்தான் தமிழர்களின் மீட்பர் எனக் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர். எந்த முகத்தை வைத்துக்கொண்டு வடக்கு மக்களிடம் ராஜபக்ஷ படையணி வாக்குக் கோருகின்றது?" என்றும் அவர் கேள்வியெழுப்பினார். (இ-7)


## இணுவில் கந்தசுவாமி

### கோவில் உறுதிப்படுத்தல்

மேற்படி ஆலயத்தின் வாக்காளர் பட்டியல் 2015 ஆம் ஆண்டு வெளியான குறித்த பட்டியலில் உபயம் உறுதிப்படுத்தப்படாதவர்கள், இறந்தவர்கள், வெளி நாட்டிலுள்ளோர் பட்டியல் புறம்பாக காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அவர்களும் மற்றும் உபயத்தை பிள்ளைகளுக்கோ வேறு நபர்களுக்கோ, கொடுக்க விரும்புவோர் அலுவலகத்தில் படிவத்தைப் பெற்று 22.10.2019 இற்கு முன்பாக உறுதிப்படுத்தி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

தலைவர்
தர்மகர்த்தாசபை.

(606)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



## திருமண சேவை

இந்து மணமக்களின் நன்மை கருதி சிவாலயாவின் இனிய சேவை உள்நாடு, வெளிநாடு, செவ்வாய்தோஷம், அத்த ஜாதகங்கள் கல்வி, தொழில் எதிர்பார்ப்புக்கேற்ப மணமக்கள் ஜாதகங்கள் பதிவாகியுள்ளன. விபரங்களுக்கு உடன் அணுகவும் (பதிவுக்கட்டணம் இலவசம்)

**திரு.ச.க.சிவகரன்** (596)
**சிவாலயா சர்வதேச திருமண நிலையம்,**
**கோவில் வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம்.**
**தொ.இல: 077 969 4009, 076 652 8901**


## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி

### Sever & Desktop Computer

### கொள்வனவுக்கான பெறுகைகள் -2019

1) பிராந்திய பெறுகைக்குழு தகுதியான, தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் இலத்திரனியல் உபகரணங்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

கொள்வனவு செய்யப்படவுள்ள **Sever & Desktop Computer** விபரம் வருமாறு.

| Se. No. | IFB No | Item | Quantity | Bid Security Rs. | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|
| 01 | NP/04/45/02/ITE/ PSSP/2019/08 | Server | 02 | 9000.00 | 2019/12/11 |
| 02 | NP/04/45/02/ITE/ PSSP/2019/09 | Desktop Computer | 20 | 10000.00 | 2019/12/11 |

2) தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (T.P- 021-228 5932, Fax – 021-228 5931) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

3) நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application For Bid Documents" என்ற பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 14.10.2019 தொடக்கம் 28.10.2019 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

4) விலைக்கேள்விகள் 29.10.2019 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக பதிவு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அலுவலக கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும். 29.10.2019 அன்று பெறுகைகள் யாவும் மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(சி-7868)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
தகைமை/தொழில்: C.T.B டிக்கெட் செக்கர்
எதிர்பார்ப்பு: சிறிய அரச தொழில்
தொ.இ: B/10141

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2 ஆம் பாதம்
கி.பா: 42 ½ செவ்.8 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:BSC (Hons) IT (IMA) MBABunessAnalyst பிசினஸ் அனலைஸ்
தொ.இ: B/10143

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூசம் 2 ஆம் பாதம்
கி.பா:15
தகைமை/தொழில்: கனடா
எதிர்பார்ப்பு: படித்த குடும்பங்கான பெண்
தொ.இ: B/10144

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2ஆம் பாதம்
கி.பா: 35 ½ செவ்.8 இல்
உயரம்:5'10"
தகைமை/தொழில்: Degree in Srilanka Institute of Marketing (SLIM) Mercantile Investment Manager (தனியார்)
எதிர்பார்ப்பு: A/L க்கு மேல் எதிர்பார்க்கவில்லை

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4 ஆம் பாதம்
கி.பா: 52 செவ் 2 இல்
உயரம்:155 cm
தகைமை/தொழில்:M.B.B.S Doctor
எதிர்பார்ப்பு: டாக்டர், பொறியியலாளர் கணக்காளர்
தொ.இ: G/6135

பிறப்பு: 1979 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: ரோகினி 3 ஆம் பாதம்
உயரம்: 5'2" கி.பா: 84
தகைமை/தொழில்:Nursing Diploma ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் அல்லது வெளிநாடு
தொ.இ: G/6143

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3ஆம் பாதம்
கி.பா:14
உயரம்:161 cm
தகைமை/தொழில்: M.B.B.S Doctor
எதிர்பார்ப்பு: டாக்டர் பொறியியலாளர் கணக்காளர்
தொ.இ: G/6168

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2 பாதம்
கி.பா:30 ½ செவ்.7இல்
தகைமை/தொழில்:B.S.C. சயன்ஸ் தனியார் நிறுவனம்
எதிர்பார்ப்பு: பட்டதாரி

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தேரர்கள் அரசியலில் இருந்து முழுவதுமாக விலக வேண்டும்

## கர்தினால் கோரிக்கை



(கொழும்பு)

தேரர்கள் அரசியலில் இருந்து முழுவதுமாக விலக வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், தான் கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் தேவாலயம் ஒன்றில் இருந்த போது, பிரதியமைச்சர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதில்லை எனக் கூறினார்.

நான் கேட்டேன் ஏன் என்று. அதற்கு பிரிதியமைச்சர் கூறினார். அரசியலில் தேவையான அளவு பணத்தை சம்பாதித்து விட்டேன் என்று.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அந்த பதிலை நான் எதிர்பார்க்கவில்லை.

கடந்த 30 வருடங்களுக்கு முன்னரும் இலங்கையில் இதுபோன்ற நிலைமைதான் காணப்பட்டது. தற்போது எனக்கு 70 வயதாகின்றது.

எனது இளைஞர் பருவத்தில் இருந்து இவர் போன்றவர்களை பார்த்துக் கொண்டுதான் உள்ளேன்.

கொள்ளையர்கள் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதனை அரசியலமைப்பினாலேயே மாற்ற வேண்டும்,

சரியாக நடக்க கூட முடியாதவர்கள் இளைஞர்களை மேலே வரவிடாமல் , அவர்களது தாய் தந்தைக்கு சொந்தமானது போல அரசியலைப் பயன்படுத்துகிறார்கள்.

எனது எண்ணம் என்னவென்றால், தேரர்கள் அரசியலில் இருந்து முழுவதுமாக விலகும் காலம்தான் இந்நாடு ஆசீர்வதிக்கப்படும் என்று பேராயர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரதேச சபை புனரமைத்த வீதிக்கு கம்பரெலிய பெயர்ப்பலகை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் புனரமைக்கப்பட்ட வீதிக்கு யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் படம் பொறிக்கப்பட்ட கம்பரெலிய திட்டப் பெயர்ப்பலகை வைக்கப்பட்டது. நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் உள்ள MS வீதியின் 1ம்,2ம் ஒழுங்கைகளுக்கே இவ்வாறு கம்பரெலியத் திட்டத்தின் பெயர்ப்பலகை பொருத்தப்பட்டது.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைப் பிரதித் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த வீதி நல்லூர் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டதாகவும் அருகில் இடம்பெற்ற கம்பரெலிய ஒதுக்கீட்டு வீதியின் பெயர்ப்பலகையை ஊழியர்கள் தவறுதலாக பொருத்திவிட்டனர்.

இருப்பினும் இது பற்றி செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த பெயர்ப்பலகையை மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# விபத்தில் இருவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ் விபத்து சம்பவித்தது.

இதில் மட்டுவிலைச் சேர்ந்த ப. கயிந்தன் (வயது-30), சாவகச்சேரியைச் சேர்ந்த கஜந்தா (வயது-29) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிட்சை பெற்று வருகின்றனர்.(இ-30)

# நூல் வெளியீட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

நந்திக்கடல் பேசுகிறது நூல் வெளியீட்டு விழா நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம், பிரதான வீதி, இல.286 இல் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும். (இ-5)

# வைத்தியர்கள் சேவையாற்ற சாதகமான சூழலை உரிய அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்

## அரச கால்நடை வைத்தியர் சங்கம் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி தாக்கப்பட்டமையை கண்டிப்பதாக இலங்கை அரச கால்நடை வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பாண்டியன் குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மதுபோதையில் இருந்த நபர் ஒருவர் வைத்தியர் மீது சரமாரியாக தாக்கியிருந்தார்.

இது தொடர்பாக அப்பகுதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் இதுவரை எவ்விதமான ஆக்கபூர்மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இச்சம்பவம் காரணமாக மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் அவ்விடத்தில் சேவையினை மேற்கொள்ள கால்நடை வைத்தியர்கள் தயங்குகின்றனர்.

ஆகவே மேற்படி சம்பவத்தை அரச கால்நடை வைத்தியர்கள் சங்கம் வன்மையாக கண்டிப்பதோடு உரிய அதிகாரிகள் இதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வைத்தியர்கள் சேவையாற்றுவதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

மேலும் இவ் அலுவலகம் உட்பட்ட வடமாகாண கால்நடை வைத்திய அலுவலகங்களின் வாகன பற்றாக்குறை தொடர்பாக வடமாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருக்கு எமது சங்கம் தெரியப்படுத்தியிருந்த போதும் அதற்கு இதுவரை தகுந்த நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(கண்டாவளை)

கிளிநொச்சி முரசுமோட்டையைச்சேர்ந்த சுப்பிரமணியம் பாஸ்கரன் நேற்று முன்தினம் இலங்கை தீவு முழுவதுக்குமான சமாதான நீதவனாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் மகாவித்தியலயத்தின் பழைய மாணவனும் தற்போது கிளிநொச்சி முரசு மோட்டையில் வசித்து வருபவருமான இவர் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ரீ.சரவணராஜா முன்னிலையில் இலங்கை தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். (9-315)

## உலக அஞ்சல் தின நிகழ்வு





உலக அஞ்சல் தின நிகழ்வுகள் நேற்று பரந்தன் பிரதான அஞ்சல் அலுவலகத்தில் இடம்பெற்றது. இலவச கண் பரிசோதனை நிகழ்வும் இடம்பெற்றது. (9-250)

# கிளிநொச்சி நீதிமன்றின் பகிரங்க அறிவித்தல்

வழக்கிலக்கம் :- AR/1790 /19 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருளான பதிவு செய்யப்படாத சிவப்பு நிற சிடி டிலக்ஸ் மோட்டார் சைக்கிள் ஜெயபுரம் பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலு வலக நாட்களில் 11.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் இம் மன்றுக்கு வருகை தந்து பதிவாளரைத் தொடர்பு கொள்ளவும்.

---

வழக்கிலக்கம்:-AR/1791/19 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருளான NPJD 6198 TVS மோட்டார் சைக்கிள் ஜெயபுரம் பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 11.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் இம் மன்றுக்கு வருகை தந்து பதிவாளரைத் தொடர்பு கொள்ளவும்.

---

வழக்கிலக்கம்:-AR/1028/18 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருளான NPMF 6818 மோட்டார் சைக்கிள் தருமபுரம்புரம் பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 20.11.2019 ஆம் திகதிக்கு முன்னர் இம் மன்றுக்கு வருகை தந்து பதிவாளரைத் தொடர்பு கொள்ளவும்.

---

வழக்கிலக்கம்:-AR/1027/18 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருளான NP MA 8857 மோட்டார் சைக்கிள் தருமபுரம் பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 20.11.2019 ஆம் திகதிக்கு முன்னர் இம்மன்றுக்கு வருகை தந்து பதிவாளரைத் தொடர்பு கொள்ளவும்.

---

வழக்கிலக்கம்:-AR/1759/19 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருளான நண்டு பிடிப்பதற்கு பயன்படும் வலைகள் மூன்றினைக் கொண்ட உரப்பை முழங்காவில் பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 11.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் இம் மன்றுக்கு வருகை தந்து பதிவாளரைத் தொடர்பு கொள்ளவும். (9)

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–188

# கற்பகதருவை நெருங்கும் ஆபத்து!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 201

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பனைமரம் என்பது வடமாகாணத்து மக்களின் அடையாளமும் சொத்துமாகும். ஆனால் தமிழ் நாட்டில் இதற்கு கொடுக்கப்பட்ட மாநில மரம் என்னும் அந்தஸ்து வடமாகாணத்தில் கொடுக்கப்படவில்லை. வடமாகாணத்து மரமாக மருது அதன் பெருமையை தனதாக்கிக் கொண்டிருக்கின்றது. கற்பகதருவினை அதிகளவில் கொண்ட வடமாகாணத்தில் அதற்குரிய கௌரவமும் அந்தஸ்தும் கொடுக்கப்படாததால் என்னவோ பனைமரமும் தைரியத்தை இழக்கத் தொடங்கியிருக்கின்றது. நிஷா புயலிலும் கடுமையான வரட்சியிலும் தாக்குப் பிடித்து உயர்ந்து நிற்கும் பனைமரங்கள் சோபையிழந்து வாடி பசுமையிழந்து நிற்கும் நிலை பாரீர்.

வடமாகாணத்தின் அடையாளமாக உள்ள கற்பகதருவிற்கும் இவ்வருடம் சோதனைக் காலம் போலத் தெரிகின்றது. பல இடங்களில் தொட்டம் தொட்டமாக பனையோலைகள் காய்ந்திருப்பதும் (Drying of leaves) இளம் இலைகள் நுனியிலிருந்து காய்வது போலவும் காட்சியளிக்கின்றது. குறிப்பிட்ட சில இடங்களில் இந்த தாக்கம் அதிகமாக இருப்பதாக எமக்கு தோற்றினாலும் இதுவும் காலநிலை மாற்றத்தின் தாக்கமோ எனவும் எண்ணத்தோன்றுகின்றது. பனையின் குருத்துப்பகுதி மட்டும் முழுமையாக காய்ந்ததாக காணப்படுவது சில இடங்களில் அவதானிக்கப்பட்டாலும் இது பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் காணப்படவில்லை. மாறாக பனைமரத்தில் வயது வேறுபாடின்றி ஒருவகை வெளிறல் (Appearance like blight) பனையோலைகளில் காணப்படுவதனால் இதனை அடிப்படையாக வைத்து ஆய்வு செய்தால் நாம் பல ஊகங்களுக்கு இடமளிக்க வேண்டியிருக்கின்றது. மேலும் அனைத்து பனைமரங்களிலும் இவ்வாறான தாக்கம் அவதானிக்கப்படவில்லை. ஒரேயிடத்தில் உள்ள சில பனைகளிலே இந்த எரிவு அல்லது வெளிறல் அதிகமாகவும் ஏனையவற்றில் மிகக்குறைவாகவும் சிலவற்றில் தாக்கமென்ற எதுவுமே காணப்படவில்லை. இது பனைகளில் உள்ள இனவேறுபாடாக இருக்கலாம். போசாக்கு குறைவான தாவரங்களில் இவ்வாறான எரிவு விரைவாக தோன்றுவது உண்டு. ஆனால் இந்த எரிவு அல்லது வெளிறல் பனைவளத்தை எந்தளவிற்கு பாதிக்கப்போகின்றது என்பது தொடங்கியிருக்கும் மழையின் தாக்கத்தோடு நிச்சயமாக தொடர்புகொண்டிருக்கும் என்பதனால் இது பற்றி மேலும் அறிய வேண்டியிருக்கின்றது.

### பனையோலைகளின் இலைநுனி வெளிறல்

பனையோலைகளில் எரிந்தது போன்ற வெளிறல் நுனிப்பகுதியிலிருந்து பனையோலையின் நடுப்பகுதி நோக்கி காணப்படுவது ஒருவகை எரிவுக்குட்பட்டது போன்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது. இது வழக்கமாக நிலத்தடிநீர் வற்றிப் போகும்போது மரங்களில் ஏற்படும் காய்தல் அல்லது எரிதல் தன்மைக்கு ஒத்ததாக இருப்பதனை அவதானிக்கலாம். குறிப்பாக நிலத்தடிநீர் தாவரங்களுக்கு கிடைக்காத நிலை ஏற்படும் போது தாவர வேர்களினால் தமக்கு தேவையான நீரை பெற்றுக்கொள்ள முடியாதபோது இலைகளில் முதலில் இந்தமாதிரியான எரிவு அல்லது காய்தல் ஏற்படும். இம்மாதிரியான எரிவு அனைத்து ஓலைகளின் நுனிகளிலும் காணப்படுவதனால் ஓரளவுக்கு பனைமரத்திற்கு தேவையான நீர் கிடைக்காததால் எரிய ஆரம்பித்ததாக ஊகிக்கலாம். இருப்பினும் முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட வரட்சிபோல இவ்வருடம் இல்லாதிருப்பது இதனை முழுமையாக உறுதி செய்ய முடியாதிருக்கின்றது. நிலத்தடி நீர் வெகுவாக வற்றிப் போவது இதற்குக் காரணமென்றால் இது காலநிலை மாற்றத்தினால் நீர் வற்றிப்போவதற்கான குறியீடாக (Indicator) கருதினாலும் பனைமரம் வழக்கமாகவே எந்த சடுதியான மற்றும் ஆழமான காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய மரமென்பதாலும் இயற்கையாகவே வளர்ந்த உள்ளூர் மரமென்பதாலும் இவ்வாறான நீர் வற்றிப்போவதற்கு இப்படி உடனடியாக எரிவுக்குள்ளாவது சாத்தியமில்லை என நம்பினாலும் சமகாலத்தில் காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள் இவ்வாறான தாக்கத்தை கற்பகதருவிலும் ஏற்படுத்தத் தொடங்கியிருக்கின்றதோ என ஐயுறத் தோன்றுகின்றது.

### வெளியான இடங்களில் அதிகமாக கருகியிருக்கும் பனைகள்

குறிப்பாக மண்டைதீவு, பருத்தித்துறை, வடமராட்சியின் சோனப்பு, வல்லை வெளி, பூநகரி இதனை அண்டிய பிரதேசங்களில் இந்த தாக்கங்களை பனைமரத்தில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக மேற்குறிப்பிட்ட இடங்களை சற்று விரிவாக உற்றுநோக்கினால் இவற்றை அண்டிய பிரதேசத்தில் நீர் தேங்கி நிற்பதையும் அது உவர்நீராக இருப்பதும் அவதானிக்கலாம். கரையோரப் பிரதேசங்கள், இன்னும் உள்ளக நீரேரிப்பிரதேசங்களை அண்டிய கரைகளில் வளர்ந்திருக்கும் பனைகளில் அதிகமாக இந்த தாக்கம் காணப்படுவதனால் உவர்நீர்க்காற்றும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக உணரலாம். இருப்பினும் இவ்வாறு முந்திய காலங்களில் எந்தவிதமான அறிகுறியும் காணப்படவில்லையே என்பதிலிருந்து இதனை முழுமையாக இதுதான் காரணமென உறுதிபட கூற முடியாதுள்ளது. இருப்பினும் தாக்கம் அதிகமாக உணரப்பட்டுள்ள இடங்களையும் இவ்வருடம்மே, ஜூன், ஜூலை, ஆவணி மாதங்களில் காணப்பட்ட வரண்ட சூழல் இவ்வாறான தாக்கத்தை பனைமரங்களில் ஏற்படுத்தக் காரணமாக இருந்திருக்கலாம் என்னும் ஐயப்பாட்டுக்கே வரமுடிகின்றது.

### ஒரே குடும்பத்து பனைமரங்கள் உணர்ந்ததை தென்னை உணரவில்லை

பனைமரங்களில் காணப்பட்ட இவ்வாறான எரிவு அல்லது வெளிறல் அருகிலிருந்த தென்னை மரங்களால் உணரப்படவில்லை என்பதனை தாக்கம் அதிகமாக காணப்பட்ட இடங்களை ஆய்வு செய்தபோது அறிய முடிந்தது. குறிப்பாக பனை மரங்களுடன் ஒப்பிடும்போது தென்னை மரங்கள் மென்மையானவை. இவ்வாறான நீர்த் தேவைப்பிரச்சினை எழுந்தால் முதலில் வாட வேண்டியவை தென்னைகளே அன்றி பனைகளல்ல. அவ்வாறாயின் தென்னை மரங்கள் பாதிக்கப்படவில்லை என்னும் போது நீர்ப் பிரச்சினை காரணமாக இருக்குமோ என முழுமையாக ஊகிக்க முடியாதிருக்கின்றது. இருப்பினும் இதனை முழுமையாக நாம் அலட்சியம் செய்ய முடியாது இருக்கின்றது. இது பற்றிய ஆய்வினை தொடர்ந்து செய்து இதற்கான அடிப்படைக் காரணத்தை (Root cause) கண்டுபிடிக்க வேண்டியிருக்கின்றது. பனைமரத்தினை மட்டும் நோக்கிய தாக்கமாக இது இருந்தால் வடமாகாணத்து பனைவளத்திற்கு பிரச்சினை ஆரம்பித்திருக்கின்றது எனலாம். ஒருபக்கத்தில் பனையை வளர்ப்பதில் கரிசனை காட்டும் நாங்கள் அதனை அழிவதிலிருந்து பாதுகாக்கும் விடயத்திலும் கவனஞ்செலுத்த வேண்டும்.

### பனைமரத்தில் நோய்த்தாக்கத்திற்கான வாய்ப்புக்கள்!

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் அங்குள்ள தென்னைகளில் இவ்வாறான ஒரு தாக்கம் உணரப்பட்டதும் அதற்கு ஒரு வகை நுண்ணங்கியும் அதனைக் காவுகின்ற தாவரத்தியும் இனங்காணப்பட்டது. ஆனால் அதே மாதிரியான தாக்கமாக பனையில் இருக்கவில்லை என்பதனை ஆரம்ப ஆய்வுகளில் கண்டறிந்தாலும் அவ்வாறான தாக்கங்களை முழுமையாக நாம் உதாசீனம் செய்யக்கூடாது. பனையில் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளை முன்கூட்டியே திட்டமிட்டு முறையான ஆய்வினூடாக அதனை நாம் அணுகாவிட்டால் பனைமர வளத்தை வடமாகாணம் இழக்கவேண்டியிருக்கும். ஒரு பக்கம் நடுகை செய்யும் போது இருக்கின்ற வளங்களை பாதுகாக்கும் விடயங்களிலும் நாம் கரிசனை செலுத்த வேண்டும்.

பனைவளத்தை பாதுகாப்பதற்கான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது மக்களில் சிலர் தமது தேவை கருதி அவற்றை அழிப்பதிலும் இறங்கியிருப்பது தெரிகின்றது. குறிப்பாக பனை மரங்களை பல இடங்களில் எரியூட்டியிருப்பதால் அவை அழிந்ததோடு அருகிலிருந்த பனைமரங்களும் கருகி இருக்கின்றன. தற்போது அவை தப்பி புதிய இலைகளை உருவாக்கும் போது இவ்வாறான வரட்சி நிலைக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் இலைகளில் மீண்டும் எரிவுக்குள்ளாகி இருப்பதனையும் அவதானிக்க முடிந்தது.



மேலும் மக்களில் சிலர் ஓரளவு உயரமான பனைமரத்தை தமது வேறு தேவைகளுக்காக அழிப்பதற்காக மண்ணெண்ணெயை நடுக்குருத்தில் ஊற்றியிருப்பது தெரிகின்றது. இதனால் பனைமரத்தின் நடுப்பகுதி ஓலைகள் இறந்து கருகி எரிந்தது போல காணப்படுகின்றன. பனைமரத்தினை அனுமதியின்றி தறிப்பது குற்றமாக கருதப்படுவதனால் மக்களில் சிலர் அதனை இவ்வாறு இறக்க வைத்து இறந்த பின்னர் பட்ட மரம் என கூறி அகற்றுகின்றனர்.

ஆனால் இதுபோன்ற தாக்கம் ஒரு வகைப் பூஞ்சணத்தினாலும் ஏற்படுத்தப்படுகின்றது. நடுக்குருத்து கருகி அழுகி வட்டுப்பகுதி அப்படியே கழன்று சரிந்து விடுவது "வட்டு அழுகல்" (Crown Rot) என்னும் பூஞ்சண நோயினால் ஏற்படுத்தப்படுகின்றது. தென்னை மரங்களில் பொதுவாக இந்நோய்த்தாக்கம் ஏற்படுவதும் அதனால் தென்னை மரங்களை முழுமையாக இழக்கும் நிலையும் காணப்படுவது உண்டு. ஆனால் பனைமரத்தில் இவ்வாறு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என உறுதியாக கூறிவிட முடியாது. இதனை உறுதி செய்வதற்கான ஆய்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

### பனைசார் பல்வகைமை!

பனைவளம் என்பது வடமாகாணத்திற்குரிய சொத்து. இந்த வளத்தை நாம் என்றென்றும் இழந்துவிடக் கூடாது. இதற்கான பலமான அடித்தளம் இடப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். பனை சார் பல்வகைத் தன்மையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் கவனமெடுக்காது விட்டால் அது எம்மை நாமே அழித்ததற்கு சமனாகிவிடும் என்பதனை புரிந்து கொள்ளுங்கள். வடமாகாணத்தின் வாழ்வியல் பனை சார் பல்வகைமையை அடிப்படையாகக் கொண்டதாகும். பனைசார் பல்வகைமையில் பனையுடன் இணைந்தனைய தாவரங்களையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். பனைசார் பல்வகைமை பாதுகாக்கப்பட்டால் அதற்கு ஏற்படும் எந்த அழிவிலிருந்தும் பனை வளத்தை பாதுகாக்க முடியும். இதற்கான ஆய்வுக் கட்டமைப்பும் திட்டமிடலும் மேலும் வலுப்படுத்தப்படல் வேண்டும்.

### பனைசார் பொருட்கள் வெளிநாட்டு சந்தைக்கு!

யாழ்ப்பாண விமான நிலையம் மற்றும் கப்பல் துறைமுக வசதியைப் பெறும் வடமாகாணம் பனைசார் பொருட்களை தரமானதாக சிறந்த பொதி செய்தல் மூலம் வெளிநாட்டு சந்தைக்கு கொண்டு செல்வதற்கான வாய்ப்பு கிட்டியிருக்கும் இந்நேரத்தில் இது சார்ந்த ஆய்வுகளை மேலும் திட்டமிட்டு முடுக்கிவிட்டு புதிய தரமான பொருட்களை வெளிநாட்டு சந்தைக்கு கொண்டுசெல்வதற்கான வழி வகைகளை கண்டறிய வேண்டும். சிறந்த தரமான பொதிசெய்தல் மூலம் இப் பொருட்களை ஏற்றுமதிசெய்ய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

### பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் பங்கு!

பனைவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு என்று கைதடியில் நிறுவப்பட்ட பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு சார்ந்து பலவிடயங்கள் இன்னும் வெளிக் கொணரப்பட வேண்டும். பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் கடந்த வருடங்களில் அங்குள்ள ஆய்வுப்புலமையை மேன்மை செய்வதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் முன்னைய தலைவர்களைக் கொண்ட ஆய்வு முகாமைத்துவக்குழு அமைக்கப்பட்டு அங்குள்ள ஆய்வாளர்களை பலப்படுத்தும் நோக்கிலும் ஆய்வுகளை விரிவுபடுத்தவும் திட்டங்கள் தீட்டப்பட்டு அதற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்ட நிலையில் அந்த குழு எந்தவிதமான காரண ங்களுமின்றி அறிவித்தலுமின்றி கலைக்கப்பட்டது. இது ஆராய்ச்சியில் அரசியல் நுழைந்தது போலாகியிருக்கின்றது.

ஆய்வு நிறுவனத்தின் செயற்பாடுகளை முறையான திட்டமிட்ட வகையில் செய்வதற்காகவும் அதனை கண்காணிப்பதற்குமான திட்டங்கள் தீட்டப்பட்டிருந்த போது ஏன் இவ்வாறு ஆய்வு முகாமைத்துவக்குழு கலைக்கப்பட்டது என்பதனை இதுவரையிலும் அந்தக் குழுவிற்கு அறிவிக்கப்படவில்லை. பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதிவாய்ந்த இரசாயனங்கள் பாவிக்கப்படாமல் காலங்கடந்திருந்ததை உறுதிசெய்த பின்னர் அதனை வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உபகரணங்கள் சில பயன்படுத்தப்படாமல் இருந்தமையும் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றை பயன்படுத்துவதற்கான வழிவகைகளும் கண்டறியப்பட்டன. பனைசார் ஆய்வு என்பது ஒரு கூட்டு முயற்சியாகும். வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்களை உள்ளடக்கிய ஆய்வுக்குழு முறையாக அமைக்கப்பட்டு இது வரையிலும் உலக பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற பனைசார் ஆய்வுகளை பட்டியலிட்டு அவற்றிலிருந்து வடமாகாண பனை அபிவிருத்திக்கு தேவையான ஆய்வுகளை முன்னிலைப்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்ள பரிந்துரைத்து அந்த விபரங்களை பனை முகாமைத்துவ சபையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுமிருந்தது.

குறிப்பாக தற்போது நடைபெற்று வரும் ஆய்வுகளில் ஆய்வு ஒழுக்கம் (Research Ethics) சார்ந்த விடயங்களிலும் அவற்றை சிறந்த ஆய்வுச்சஞ்சிகைகளில் (Research Journals) பிரசுரிப்பதற்கும் கவனஞ் செலுத்தப்பட்டது. இது பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வினைப் பலப்படுத்தி வடமாகாணத்து பனைசார் மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் செய்யப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகளாகும்.

காலத்திற்கு காலம் இவ்வாறான சடுதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த ஆய்வுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கான திட்டத்தை இடைநடுவில் கைவிட்டதாக இருப்பதுடன் அதில் கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாமலும் போயிருக்கின்றது. எமக்கிருக்கும் பனைவளம் தற்போது அதிகமானதாகும். இருக்கின்ற பனைகளின் எண்ணிக்கையை முறையாக கணக்கிடுவதற்கான ஆய்வுதிட்டமும் கலந்தாலோசிக்கப்பட்டது பனை ஆராய்ச்சி நிறுவனம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான, மருத்துவ, மற்றும் விவசாய பீடங்களுடன் இணைந்து மேற்கொள்ளவேண்டிய ஆய்வு நடவடிக்கைகளை பலமான அத்திவாரத்துடன் அமைக்கவேண்டிய நிலையில் உருவாக்கப்பட்ட ஆய்வு திட்டங்களை திடமான நிலையில் ஏற்படுத்தாமல் விட்டால் பனை அபிவிருத்தியை மீண்டும் இருண்டயுகத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டதாகிவிடும்.

கற்பகதரு என அழைக்கப்படும் பனையில் இவ்வாறு எரிவு தாக்கம் காணப்படுவதனை இன்னும் கவனமாக உன்னிப்பாக கவனித்து அதனை தடுப்பதற்கான அல்லது அதிலிருந்து விடுபடுவதற்கான ஆய்வுகள் மேலும் முடுக்கிவிடப்படல் வேண்டும். இத் தாக்கம் பற்றிய வேறு தகவல்கள் உங்களுக்கு கிடைக்கப்பெற்றால் அல்லது நீங்கள் அவதானித்தால் அதனை வலம்புரிக்கோ அல்லது இக்கட்டுரையாளருக்கோ அறிவியுங்கள். கால நிலை மாற்றம் உலகிலுள்ள தாவரங்களை விலங்குகளை வெகுவாக பாதிக்கும் செய்திகளை நாம் செவிமடுக்கும் இந்நிலையில் எமது பிரதேசத்து வளத்தை நாம் என்றென்றும் இழந்து விடக்கூடாது. இதனை நாம் கவனத்திலெடுத்து சிறந்த கட்டமைப்பு பொறிமுறையினூடாக பனைவளத்தை பாதுகாப்பதனை உறுதிசெய்து கொள்வோம்.

# வடமாகாணப் பண்பாட்டு பெருவிழா நேற்று வவுனியாவில் ஆரம்பம்





(நெளுக்குளம்)

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பண்பாட்டுப் பெருவிழாவின் முதலாம் நாள் நிகழ்வு நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் ஆரம்பமான முதல் நாள் நிகழ்வில் கலை நிகழ்வுகள் மற்றும் சிறப்பு ஆய் வரங்கு இளங்கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம் கனீபா, பிரதேச செயலாளர் கா. உதயராசா, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் உதவிப்பணிப்பாளர் சுஜீபா சிவதாஸ், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் நா.சண்முகலிங்கம், கலைஞர் வேல் ஆனந்தன், ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் மு. கௌரிகாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-299)

# காலபோக நெற்செய்கை கூட்டம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு முக்கிய குளங்களின் கீழான காலபோக நெற்செய்கைக் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. காலபோக நெற்செய்கைக் காலங்களில் குளங்களின் நீரினை சிறந்த முறையில் பயன்படுத்துதல். கால்நடைக் கட்டுப்பாடு உட்பட பல்வேறு விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. முத்தையன்கட்டுக் குளத்தின் கீழ் 6 ஆயிரத்து 112 ஏக்கரிலும் வவுனிக் குளத்தின் கீழ் 6 ஆயிரத்து 60 ஏக்கரிலும் காலபோக நெற் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (9-350)




# ‘வீதி விபத்துக்களை தடுப்போம் உயிர் காப்போம்’

## வடக்கில் விழிப்புணர்வு நடைப்பவனி நேற்று







(நெளுக்குளம்)

வடமாகாண ஆளுநரின் வழிநடத்தலில் ஆரம்பமான வீதிப்பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு வடக்கு மாகாண மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்று காலை விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

வடமாகாணத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்த வீதி பாதுகாப்பு வாரத்தின்போது வடக்கு முழுவதும் பல்வேறு மட்டங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கனீபா தலைமையில் மாவட்ட செயலகத்திலிருந்து ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனி கண்டி வீதி வழியாக வவுனியா நகரசபை வரையில் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலக முன்றலில் ஆரம்பமாகிய பேரணி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைவரை சென்றடைந்தது.

இந்த நடைபவனிகளில் அந்தந்த மாவட்டங்களை சேர்ந்த வீதி பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள், வடமாகாண போக்குவரத்து அதிகாரசபையின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் நெடுங்கேணி ஒலுமடு தமிழ் மகாவித்தியாலய அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் பாடசாலை மாணவர்களினால் வீதி பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று பாடசாலை முன்றலில் இடம் பெற்றது. (9-250-299-350)

# கண்டாவளை பிரதேசத்தில் 4 வருடங்கள் கடந்தும் வீடுகள் கட்டி முடிக்கப்படாததால் பாதிக்கப்பட்டுள்ள 169 குடும்பங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 169 குடும்பங்கள் வீட்டுத்திட்டப் பயனாளிகளாக கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரே தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் மாற்றீட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுவதனால் குறித்த குடும்பங்கள் வீடுகளைக் கட்டி முடிக்கப்படாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டங்கள் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள்மற்றும்அரசாங்கம்ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் வீட்டுத்திட்டங்கள்யாவும்சீமெந்து மணல் என்பவற்றையே பயன்படுத்தி அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கண்ணகி நகர், குமாரசுவாமிபுரம், நாதன் திட்டம், தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு ஆகிய பகுதிகளில் 169 குடும்பங்கள் வீட்டுத்திட்டப் பயனாளிகளாக கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு அத்திபாரம் மாத்திரம் அமைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

அதாவது அடுத்த கட்டமான கட்டுமானப்பணிகளை கிரவில் மண், சீமெந்து என்பவற்றை பயன்படுத்தி மாற்றீட்டு தொழில்நுட்பத்தில் வீடுகளை அமைக்குமாறு வற்புறுத்தப்பட்டு வருவதனால் குறித்த வீடுகளை அமைக்க அதன் பயனாளிகள் மறுத்து மணல், சீமெந்து கொண்டு அமைப்பதற்கே தமது விருப்பத்தை தெரிவித்து வரும் நிலையில் இந்த வீடுகளின் கட்டுமானப் பணிகள் கடந்த நான்கு வருடங்களாக கிடப்பில் போடப்பட்டுள்ளன.

வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட போதும் இவ்வாறான இழுபறி நிலை காரணமாக வீடுகள் அமைக்கப்படாது காணப்படுவதனால் மேற்படி குடும்பங்கள் விடுகளின்றி சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதுடன் தொடர்ந்து மாற்றீட்டு தொழில்நுட்பத்தில் வீடுகளை அமைக்க மறுத்து வருவதுடன், இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமும் தமது கோரிக்கைகளை வைத்து வருகின்றனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மேற்படி பாதிக்கப்பட்ட பயனாளிகள் வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்று தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இதுவரை காலமும் வழங்கப்பட்டு வருகின்ற வீட்டுத்திட்டங்கள் போன்று தமக்கான வீட்டுத்திட்டங்களை மாற்றி சீமெந்து, மணல் என்பவற்றில் அமைக்க ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# சிறுவர்களுக்கான கல்விச் சுற்றுலா




(அக்கராயன்)

கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் வருடந்தோறும் மேற்கொள்கின்ற முன்பள்ளி சிறார்களுக்கான இலவச கல்விச் சுற்றுலா கடந்த வாரம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 25 முன்பள்ளிகளைச் சேர்ந்த 278 சிறுவர்களை தங்களது வாகனங்களில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்று மகிழ்ச்சிப்படுத்தியுள்ளனர்.

கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் வருடந்தோறும் தங்கள் சமூகத்திற்கான பணியாக இதனை மேற்கொண்டு வருகின்றனர். (9-350)

# மாலதியின் நினைவுதினம் அனுஷ்டிப்பு



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரர் மாலதியின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் இடம் பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண முன்னாள் அமைச்சர் த.குருகுலராஜா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர். (9)

# நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிகழ்வுகளை புகைப்படம் எடுத்து அச்சுறுத்திய நபரால் பரபரப்பு

முல்லைத்தீவு - நாயாறு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பிக்குவினுடைய உடலை நீதிமன்ற உத்தரவினை மீறி ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து தகனம் செய்திருந்தனர்.

இந் நிலையில் இவ்வாறு இடம்பெற்ற இந்த துர் சம்பவத்தையடுத்து விசேட சாந்தி பூசை நிகழ்வொன்றை நேற்று நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

ஆலய வளாகத்தில் விசேட சாந்தி பூசை நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை, அப் பகுதிக்கு வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர், அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுத்தார்.

ஆலய வளாகத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில், நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாரிடம் குறித்த நபரின் அச்சுறுத்தல் செயற்பாடு குறித்து முறையிட்டபோதும் பொலிஸார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்துள்ளனர். இதனால் அங்கு வழிபாடுகளுக்காக வந்த தமிழ் மக்களுக்கும் குறித்த நபருக்குமிடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றது. அப்போது பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் குறித்த நபருக்கு ஆதரவாக செயற்பட்டதுடன் அங்கிருந்த தமிழ்மக்களை அவ்விடத்திலிருந்து விலகிச்செல்லுமாறு அகற்றியிருந்ததாக மக்கள் குற்றஞ் சாட்டியிருந்தனர். (9)

# சிறந்த விவசாயிகளை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

(பனிக்கன்குளம்)

சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர், சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர், சிறந்த முறையில் தேனீ வளர்ப்பில் ஈடுபடுவோர் மற்றும் சிறந்த அடர்த்தி முறையில் மாமரச் செய்கையினை மேற்கொண்டுள்ளோரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை அருகிலுள்ள விவசாயப்போதனாசிரியர்களின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தி ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப்போதனாசிரியர் அலுவலகங்களில் ஒப்படைக்கலாம். அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்க விரும்புவோர், பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகம், விவசாயத்திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பூ.உகநாதன் அறிவித்துள்ளார்.

மேலும் கடந்த வருடங்களில் மாவட்ட மட்டத்தில் சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் இம்முறை போட்டியில் பங்குபற்றுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (9-281)

# பாலம் அமைக்கும் பணி ஆரம்பம்



(அக்கராயன்)

கிளிநொச்சி இராமநாதபுரம், புதுக்காடு அழகாபுரி வித்தியாலயம் செல்லும் வீதியில் பெட்டிப்பாலம் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. கரைச்சி பிரதேச சபையின் நிதியில் குறித்த பாலம் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. வெற்றிப்பாதை சனசமூக நிலையம், மாவடியம்மன் சனசமூக நிலையம் என்பன வேலைகளைப் பொறுப் பேற்று மேற்கொண்டு வருகின்றன. மழை காலத்தில் வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்வதன் காரணமாக மாணவர்களும் பொது மக்களும் பயணிப்பதில் ஆண்டுதோறும் நெருக்கடியை எதிர்கொண்டு வந்த நிலையில் தற்போது குறித்த பால வேலைகள் நடைபெற்று வருகின்றன. (9-350)

# ஆசிரியர் தினத்தில் மரம் நடுகை



(குருமன்காடு)

ஆசிரியர் தினத்தை முன்மாதிரியாக மரநடுகை மூலம் வவுனியா அல்- இக்பால் மகாவித்தியாலயம் கொண்டாடியுள்ளது.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மரநடுகை மூலம் அத்தினத்தை வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்களும் மாணவர்களும் கொண்டாடியுள்ளனர்.

மாணவர்களின் உதவியுடன் பாடசாலை சூழலில் 50 மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. இதனை பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத், பிரதி அதிபர் எம்.ராசிக் மற்றும் ஆசிரியர்கள் நாட்டி வைத்தனர். (9-250)

# வவு.வாரிக்குட்டியூரில் தொடரும் கல் அகழ்வு; அச்சத்தில் வாழும் அயல் கிராம மக்கள்



(நெளுக்குளம்)

வவுனியா வாரிக்குட்டியூர் கிராமத்தில் கடந்த 6 வருடங்களாக கல் அகழ்வுப் பணி நடைபெற்று வருவதால் அதற்கு அருகில் வசிக்கும் பொதுமக்கள் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதாக குற்றம்சாட்டி வருகின்றனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வாரிகுட்டியூர் கிராமத்திற்கருகில் உள்ள மலையில் கல் அகழ்வுப் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. சுமார் 100 அடி ஆழம் வரை கற்பாறைகள் உடைக்கப்பட்டு கற்கள் அகழப்பட்டு வருகின்றன. பாறைகளை உடைப்பதற்காக சக்தி வாய்ந்த வெடி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் வெடித்து சிதறும் கருங்கற்கள் அருகில் அமைந்துள்ள கலைமகள் கிராமத்தில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் வந்து விழுகின்றன. தொடர்ச்சியாக இவ்வாறு இடம்பெற்று வருகின்ற நிலையில் வீடுகளின் கூரைத் தகடுகளும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை நிலமட்டத்தில் இருந்து 100 அடிக்கும் ஆழமான பகுதிகளில் கற்கள் உடைக்கப்படுவதால் அண்மையில் உள்ள கிராமத்தின் கிணறுகள், குழாய்க்கிணறுகளில் நிலத்தடி நீர் மிகவும் கடுமையாகப் பாதிக்கபட்டுள்ளதுடன் அருகிலுள்ள கிணறுகளில் சுத்தமாக நீர் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் வெடிச்சத்தம் காரணமாக குழந்தைகளுக்கு செவிட்டுத்தன்மை குறைபாடு ஏற்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் பல வருடமாக வசித்து வருகின்ற மக்கள் தற்காலிக கொட்டில்களில் இருந்த நிலையில் வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட மாதிரி வீட்டுத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் கடந்த மாதமளவில் திறந்து வைக்கப்பட்டிருந்தது. தற்போது அந்தப் புதிய வீடுகளின் கூரைத்தகடுகளே கற்கள் விழுந்து சேதமடைந்துள்ளதுடன், அதிர்ஷ்டவசமாக குழந்தைகள் மற்றும் பொது மக்களுக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

குறித்த கல் அகழ்வுப் பணி நடைபெறும் "றங்கெத்கம" என்ற பகுதி வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை எல்லைக்குள் வருவதுடன் பாதிக்கப்பட்டுள்ள கிராமம் செட்டிகுளம் பிரதேச சபை எல்லைக்குள் வருகின்ற தமிழ் கிராமமாக உள்ளது.

இதனால் இவ்விடயம் தொடர்பாக எங்கு சென்று முறையிடுவது என்பதில் குழப்ப நிலை காணப்படுவதாக கிராம மக்கள் கவலை தெரிவிப்பதுடன் அனைத்துத் தரப்புகளுக்கும் கடிதம் மூலம் தமது பிரச்சினைகளை பலமுறை தெரிவித்துள்ளதாகவும் யாரும் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரவில்லை என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே கிராமத்தின் இருப்பை பாதுகாக்கும் வகையில் உரிய அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதுடன் குறித்த செயற்பாட்டை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்பது கிராம மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இதேவேளை பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக சிலவேளைகளில் குறித்த கல் அகழ்வுப் பணி இடை நிறுத்தப்படுவதும் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதும் வாடிக்கையாக மாறிவிட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை செயலாளரிடம் கேட்டபோது குறித்த கல் அகழ்வுப் பணிக்கான வியாபார அனுமதி இந்த வருடம் எமது பிரதேச சபையால் கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதனை ஆராய்வதாக தெரிவித்தார். (9-250-299)

# பாலங்குளத்திலிருந்து வெளியேறும் நீரை சேமிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் பாலங்குளம் வழியாக வெளியேறுகின்ற வெள்ளத்தினை சேமிப்பதன் மூலம் ஆரோக்கியபுரம் கிராமம் அபிவிருத்தி அடையும் என அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

துணுக்காயின் பாலங்குளம் அபிவிருத்தி செய்யப்படும் என முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கடந்த பத்தாண்டுகளாக வலியுறுத்தப்பட்டதன் அடிப்படையில் சிறுவேலைகள் குளப்பகுதியில் நடைபெற்றுள்ள போதிலும் முழுமையான வேலைகள் இடம் பெறவில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.


மழை காலத்தில் குளம் விரைவாக நிரம்பி கூடுதலான நீர் வான்வழியாக கடலைச் சென்றடைவதாகவும் குளத்தின் அணைக்கட்டினை உயர்த்தி நீர்ப்பாசன வாய்க்கால்களை புனரமைப்பதன் மூலம் ஆரோக்கியபுரம் கிராமத்தில் வாழ்கின்ற நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைய முடியும்.

பாலங்குளத்தின் கீழ் தற்போது அறுபது ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் குளம் முழுமையாக அபிவிருத்தி அடைகின்ற போது இருநூறு ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் எதிர்காலத்தில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான சூழல் காணப்படுகின்றது என விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (9-350)

# பாரதம்

### கீழடி அகழாய்வில்

## பழந்தமிழர் தங்கிய கல்திட்டை கண்டுபிடிப்பு



(சிவகங்கை)

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடியில் பழந்தமிழர்கள் தங்கிய கல்திட்டை கண்டுபிடிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடியில் தொல்லியல் துறையினர் 5 ஆம் கட்ட அகழாய்வுப் பணிகளை நடத்தி முடித்தனர். இதனையடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மனிதர்கள் பதுங்கும் வகையில் அமைக்கப்பட்ட கல்திட்டையொன்று கண்டறியப்பட்டது.

கீழடியில் வாழ்ந்த ஆதி தமிழர்கள் இரவு மற்றும் மழை, வெயில் காலங்களில் தங்களைப் பாதுகாக்க இந்தக் கல்திட்டை அமைத்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.


குறித்த தகவலை கதிரேசன் என்பவர் தொல்லியல்துறை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ள நிலையில், குறித்த கல்திட்டை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து 6 ஆம் கட்ட அகழ்வாராய்ச்சிகளை முன்னெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.(ஐ)

### ராஜீவ்காந்தி கொலை வழக்கு

## எழுவரையும் விடுதலை செய்ய வேண்டும்

### பிரதமரிடம் ராமதாஸ் மனு கையளிப்பு





(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்துவரும் பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் மீண்டும் கோரிக்கை விடுத்தார்.

பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் மற்றும் இளைஞரணித் தலைவரான அன்புமணி ஆகியோர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடல் 20 நிமிடங்கள் வரை நீடித்த நிலையில், கலந்துரையாடலின் நிறைவில் கோரிக்கைகளை உள்ளடக்கிய மனுக்கள் இரண்டு பிரதமரிடம் கையளிக்கப்பட்டன.

குறித்த மனுக்களில், 29 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரின் விடுதலை குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் மற்றைய மனுவில் கோதாவரி - காவிரி ஆகிய ஆறுகளை இணைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

ராஜீவ்காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் எழுவரின் விடுதலையில் ஆளுநர் முடிவெடுக்கலாம் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இருப்பினும் ஆளுநர் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஈரானின் எண்ணெய் கப்பல் மீது திடீர் பயங்கரவாதத் தாக்குதல்



(டெஹ்ரான்)

**செங்கடல் பகுதியில் ஈரானின் எண்ணெய் கப்பல் மீது பாரிய தாக்குதல் ஒன்று இடம்பெற்றதைத் தொடர்ந்து கப்பல் தீப்பிடித்து எரிவதாக எனவும் கப்பலிற்கு பாரிய சேதம் ஏற்பட்டு கடலில் எண்ணெய் கசிகின்றது எனவும் இது பயங்கரவாதத் தாக்குதல் எனவும் சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ)**

## அமெரிக்காவின் தூண்

## மீண்டும் அணுவாயு

### வடகொரியா மிர

(பியாங்யாங்)

அணுவாயுதம் மற்றும் நீண்ட தொலைவு ஏவுகணை சோதனையில் மீண்டும் ஈடுபடப் போவதாக வடகொரியா எச்சரிக்கை விடுத்தது.

வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தங்களது குறுகிய தொலைவு ஏவுகணை சோதனைகளுக்கு கண்டனம் தெரிவிக்குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளை அமெரிக்கா தூண்டி வருவதற்குப் பதிலடியாக இத்தகைய சோதனைகள் நடத்தப்படும் என வடகொரியா கூறியுள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், 'எங்களது தற்பாதுகாப்பை உறுதி

## வீதியில் படகை நி

## பருவநிலை ஆர்வல

(நியூயோர்க்)

அமெரிக்காவில் வீதியில் படகை நிறுத்தி பருவநிலை மாற்றப் போராட்டத்தில் ஈடுபட்ட 60 பருவநிலை ஆர்வலர்களை பொலிஸார் கைது செய்தனர்.

பருவநிலை மாற்றத்திற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என உலகம் முழுவதும் உள்ள பருவநிலை ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அண்மையில் ஐ.நா.சபையில் நடைபெற்ற பருவநிலை மாற்ற மாநாட்டில்,



## சிரியாவில் தாக்குதல் நடத்த துருக்கிக்கு ஒப்புதல் வழங்கவில்லை

### அமெரிக்கா மறுப்பு

(டமாஸ்கஸ்)

வடக்கு சிரியாவில் குர்திஸ் படைகளுக்கு எதிராக துருக்கி தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ள நிலையில், இந்தத் தாக்குதல் தொடர்பாக தாங்கள் எந்த ஒப்புதலையும் வழங்கவில்லை என அமெரிக்க வெளியுறவு செயலர் மைக் பொம்பியோ மறுப்புத் தெரிவித்தார். இது தொடர்பில் பேசிய மைக் பொம்பியோ, சிரியாவில் இருந்த அமெரிக்கத் துருப்புகளை அமெரிக்க ஜனாதிபதி திரும்பப் பெற்றதை ஆதரித்து உரையாற்றினார்.

சிரியாவில் துருக்கி தாக்குதல் நடத்த அமெரிக்கா ஒப்புதல் அளித்ததாக வெளி வந்த செய்திகளில் உண்மையில்லை என்றும் மைக் பொம்பியோ சுட்டிக்காட்டினார். ஐ.எஸ். படையினர் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் ஆயிரக்கணக்கில் சிரியாவின் சிறைகளில் உள்ளனர். அந்தச் சிறைகளை குர்திஸ் ஆயுதப் படையான சிரிய ஜனநாயகப் படை காத்து வருகிறது. வடக்கு சிரியாவைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அமெரிக்க ஆதரவு பெற்ற குர்திஸ் படைகளோடு துருக்கி நேரடியாக மோதலைத் தொடங்கியுள்ளது.

சிரியாவில் உள்ள ஐ.எஸ். படைகளை முறியடிப்பதில் அங்குள்ள குர்திஸ் ஆயுதப் படையான சிரிய ஜனநாயகப் படை அமெரிக்காவின் கூட்டாளியாக செயற்பட்டது. ஆனால், சிரியா ஜனநாயகப் படை சிக்கலான நேரத்தில் எல்லைப்புறத்தில் இருந்து அமெரிக்கத் துருப்புகளைப் பின்வாங்கியதை முதுகில் குத்தும் செயலாகக் கருதுகிறது. இந்தத் தாக்குதல் தொடங்குவதற்கு முன்பாக சிரியாவில் இருந்த அமெரிக்க துருப்புகளைச் சர்ச்சைக்குரிய முறையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திரும்பப் பெற்றார். ஆனால், துருக்கி எதையாவது செய்தால், எல்லை மீறி சிரியாவுக்குள் நுழைந்தால், அதன் பொருளாதாரம் அழிக்கப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இந்நிலையில், துருக்கி தாக்குதலைத் தொடங்கியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.(ஐ)





# ண்டல் செயற்பாட்டிற்கு பதிலடியாக

# த சோதனைகள் நடத்தப்படும்

## ிரட்டல்

செய்வதற்காகவே குறுகிய மற்றும் நடுத்தர தொலைவு ஏவுகணைகளை சோதித்து வருகிறோம். ஆனால், அந்தச் சோதனைகளைக் கண்டிக்குமாறு ஐ.நா. உறுப்பு நாடுகளை அமெரிக்கா தூண்டியுள்ளது.

அமெரிக்காவின் இந்தப் போக்கு நீடித்தால் மீண்டும் அணு ஆயுத மற்றும் நீண்ட தொலைவு ஏவுகணைப் பரிசோதனைகளில் நாங்கள் ஈடுபடுவோம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# ட்ரம்புக்கு எதிரான விசாரணை அவசியம்

## அமெ.முன்னாள் துணை ஜனாதிபதி வலியுறுத்து

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான குற்றப்பிரேரணை மீதான விசாரணைகளுக்கு, முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைடன் முதல் தடவையாக அழைப்பு விடுத்தார்.

இதேவேளை, ஜனாதிபதி ஏற்கனவே தன்னைத்தானே தண்டித்துக் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் வேட்பாளராக ஜோ பைடன் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இந்நிலையில், ஜோ பைடன் மற்றும் அவரது மகள் மீதான பகி



ரங்க விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான அழுத்தங்களை உக்ரேய்ன் ஜனாதிபதி மீது பிரயோகித்த பின்னணியில், அமெரிக்க ஜனாதிபதி செயற்பட்டாரா? என்பது தொடர்பாக கண்டறிவதற்காக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில், விசாரணைகளில் ஒத்துழைப்பு வழங்க முடியாது என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# றுத்திப்போராட்டம்

# ர்கள் 60 பேர் கைது




சுவீடன் நாட்டைச் சேர்ந்த பருவ நிலை ஆர்வலரான கிரேட்டா தன்பெர்க் பருவ நிலை மாற்றம் பற்றிய விளைவுகள் குறித்து விளக்கினார். இதைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் பருவநிலை மாற்றப் போராட்டங்கள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில், நியூயோர்க் நகரில் உள்ள மான்ஹாட்டன் பகுதியில் நேற்று முன்தினம் காலை பருவநிலை மாற்றத்தைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தி பருவநிலை ஆர்வலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நகரின் முக்கிய வீதியில், 'உடனே செயற்படு' என்ற வாசகம் எழுதப்பட்ட பச்சை நிறப் படகு ஒன்றை நிறுத்தி, ஒரேஞ் நிற லைப் ஜாக்கெட்டுகளை அணிந்து போராட்டம் நடத்தினர். இதனால் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட 60 பேரைக் கைது செய்தனர். (ஐ)

## 2018, 2019 ஆம் ஆண்டு

# இலக்கியத்திற்கான நோபல் இருவருக்கு பகிர்ந்தளிப்பு

(ஸ்டாக்ஹோம்)

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசுக்கு பெண் எழுத்தாளர் உட்பட இரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம், வேதியியல் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இலக்கியத்திற்கான நோபல் பரிசு சுவீடன் நாட்டின் இலக்கிய மன்றமான சுவீடன் அகடமி தேர்ந்தெடுத்து வருகிறது.

இதற்கிடையில், கடந்த ஆண்டு சுவீடன் அகடமியில் உறுப்பினராக உள்ள கத்ரீனா புரோஸ்டென்சனின் கணவர் ஜீன் கிளவுட் அர்ணால்ட் மீது பாலியல் புகார் அளிக்கப்பட்டது. மேலும், முறையான அறிவிப்பிற்கு முன்னர் நோபல் பரிசு வெற்றியாளர்களின் பெயர் வெளியிடப்பட்டதாகவும் புகார் எழுந்தது.





இதையடுத்து, 2018 ஆம் ஆண்டு வழங்கப்பட இருந்த இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2019 ஆம் ஆண்டு வழங்கப்படும் என சுவீடன் அகடமி அறிவித்திருந்தது.

இந்நிலையில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கியத் துறைக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அதன்படி 2018 ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு போலந்து நாட்டை சேர்ந்த ஒல்கா டோகார்சுக் என்ற பெண் எழுத்தாளர் தேர்வு செய்யப்பட்டார்.

மேலும், 2019 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு ஆஸ்திரியாவைச் சேர்ந்த எழுத்தாளர் பீற்றர் ஹேண்ட்கி தேர்வு செய்யப்பட்டார். (ஐ)

## FATF கூட்டத்தின் எதிரொலி

# 4 முக்கிய தீவிரவாதிகளை கைது செய்தது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நான்கு தீவிரவாத இயக்கத்தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பான FATF கூட்டம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இன்று முதல் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் பாகிஸ்தானை தடை செய்யப்பட்ட பட்டியலில் இணைத்து நிதியுதவிகளை நிறுத்தப் போவதாக சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பான FATF அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்தது.

அத்துடன், ஏற்கனவே பாகிஸ்தான் சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பான FATF அமைப்பால் கிரே பட்டியல் எனப்படும் கண்காணிப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜாபர் இக்பால், முகமது அஷ்ரப், யாஹயா அசீஸ் மற்றும் அப்துல் சலாம் ஆகிய தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் தலைவர்கள் 4 பேரை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.. லஷ்கர் இ தொய்பா, ஜமாத் உத்தவா, ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த இந்த நான்கு பேர் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இராணுவ இரகசியங்களை கசியவிட்ட புலனாய்வுத்துறை அதிகாரி கைது

(வோஷிங்டன்)

அமெரிக்காவில், இராணுவ இரகசியங்களை ஊடகங்களிடம் தெரிவித்த பாதுகாப்பு புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்க நாட்டின் பாதுகாப்புப் புலனாய்வுத் துறையில் ஆய்வாளராகப் பணியாற்றி வந்தவர் ஹென்றி கைல். இவர் நாட்டின் இராணுவ இரகசியங்கள் அடங்கிய தகவல்களை ஊடகவியலாளர்கள் இருவருக்கு வழங்கியதால் கைது செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்ற ஆவணங்கள் மூலமாக இந்த தகவல்கள் தெரியவந்தன.

'கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மற்றும் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதமும் ஹென்றி கைல் இரகசியத் தகவல்களை ஊடகவியலாளர்களுக்குக் கசிய விட்டுள்ளார். இராணுவ இரகசியங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்க அவருக்கு எந்த அங்கீகாரமும் அளிக்கவில்லை. வேண்டுமென்றே இராணுவ இரகசியங்களை வெளியிட்டார். அவர் வெளியிட்ட தகவல்கள் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு மிகப் பெரிய அச் சுறுத்தலாக அமையக் கூடும்' எனவும் நீதிமன்ற ஆவணங்கள் சுட்டிக்காட்டின. (ஐ)

# சு.க.-பெரமுன இணைவுடன்

# கோத்தாவின் வெற்றி உறுதி

## பெரும்பான்மை வாக்குகளுக்கே முயற்சி-டிலான்

(பத்தரமுல்லை)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் இணைந்துகொண்டதன் மூலம் கோத்தபாய ராஜபக்ஷ வின் வெற்றி உறுதியாகிவிட்டது. பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற வைப்பதற்கே தற்போது முயற்சிக்கின்றோம். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் பின் கதவால் தான் ஆட்சிக்கு வந்திருக்கிறது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

பத்தரமுல்லயில் அமைந்துள்ள எஸ்.பி. திஸாநாயக்கவின் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து செயற்பட வேண்டும் என்றே நாங்கள் ஆரம்பித்தில் இருந்து தெரிவித்து வந்தோம். தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்போது கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்ததோ அப்போதே கோத்தாவின் வெற்றி உறுதியாகிவிட்டது. கோத்தபாய ராஜபக்ஷவை பாரிய வாக்குவித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும். அதற்காகவே நாங்கள் தற்போது முயற்சிக்கின்றோம்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு முடியுமானால் சதித்திட்டங்கள் மேற்கொள்ளாமல் நேரடியான மோதலுக்கு முன்வர வேண்டும். மக்களின் ஆதரவு யாருக்கு உள்ளது என்பதை தேர்தலில் பார்த்துக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கூரிய ஆயுதங்களால் குத்தி குடும்பப் பெண் படுகொலை!

## தாயும் மகளும் படுகாயம்

(கொச்சிக்கடை)

நீர்கொழும்பு- கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெளிஹேன வீதியின் ஏத்கால பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் 33 வயது பெண் ஒருவர் கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் 60 வயதுடைய தாயும் 9 வயதுடைய மகளும் தாக்குதலில் படுகாயமடைந்துள்ள நிலையில், நீர்கொழும்பு மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட பெண், தனது தாய், மகளுடன் ஏத்கால பிரதேசத்திலுள்ள தென்னந்தோட்டம் ஒன்றைப் பராமரிக்கும் பொறுப்பில் இருந்தார். அந்தத் தோட்டத்திலுள்ள சிறிய வீடு ஒன்றில் அவர்கள் வசித்து வந்த நிலையிலேயே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில், கொச்சிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பொதுஜன பெரமுன - சுதந்திரக் கட்சி புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்து



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு நேற்று முன்தினம் முற்பகல் கைச்சாத்திடப்பட்டது.

ஸ்ரீலங்கா பவுண்டேசன் இன்ஸ்ரிரியூட்டில் நேற்று முன்தினம் முற்பகல் நடந்த இந்நிகழ்வில், சுதந்திரக் கட்சியின் சார்பில், அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகரவும் பொதுஜன பெரமுனவின் சார்பில் அதன் செயலாளர் சாகர காரியவசமும் இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இதற்கமைய, அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் இரண்டு கட்சிகளும் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணி என்ற பெயரில் நாற்காலிசின்னத்தில் போட்டியிட இணக்கப்பாடு காணப்பட்டது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நால்வகை மனிதர்கள்

இந்த சமுதாயத்திலுள்ள மக்களை நாலு வகையாக பிரிக்கலாம் என்று ஒரு பெரியவர் சொல்கிறார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்கிறார்களே அவர்கள் முதல் ரகம். அவர்களை மேன் மக்கள் என்று சொல்லலாம். இவர்களெல்லாம் எப்படி என்றால்...

நாங்கள் கஷ்டப்பட்டாலும் சரி, அடுத்தவர்கள் நல்லாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். வாழ்க்கையை பொதுப்பணிக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். எல்லோரும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் கிடைத்து விட்டால் மக்கள் அதிர்ஷ்டசாலிகள்.

ஒரு பேருந்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார் ஒருவர். இன்னொருவர் பக்கத்தில் இடம் இல்லாமல் நின்று கொண்டு வந்தார். இவர் பார்த்து விட்டு சேர் நீங்கள் உட்காருங்கள் என்று சொல்லி அவரைத் தன் இடத்தில் உட்கார வைத்து விட்டு இவர் எழுந்து நின்றார். இவரைப் பார்த்தால் எங்களுடைய கண்ணுக்கு ஏமாளியாகத் தெரியலாம். ஆனால் இப்படியான குணம் உள்ளவர்கள் எல்லாம் மேன் மக்கள். நான் சொன்ன முதல் ரகம்! சரி அடுத்தது இரண்டாவது ரக மனிதர்கள். இவர்களைப் பொதுவாக நல்வர்கள் என்று சொல்லலாம். இவர்கள் எப்படி என்றால்... ஒரு நியாயத்துக்கு கட்டுப்படுபவர்கள்... அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்ய மாட்டார்கள். இருந்தாலும் அடுத்தவர்கள் சௌகரியமாக இருப்பதற்காக தன்னுடைய சௌகரியத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க மாட்டார்கள்.

பேருந்தில் ஒரு ஆசனத்தில் இந்த இரண்டாவது ரக மனிதன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இன்னொருத்தர் நின்று கொண்டே பிரயாணம் செய்கிறார் ஆசனம் கிடைக்காமல்! நம்மால் நிற்கிறவருக்கு பரிதாபப்படுவாரே தவிர, தான் எழுந்து அவரை உட்கார வைத்து விட்டு தான் நின்று கொண்டு வரமாட்டார். அந்தளவுக்கு நான் தியாகி இல்லை என்று சொல்லி விடுவார். இவர்களெல்லாம் இரண்டாவது ரகம். மூன்றாவது ரகம் எப்படித் தெரியுமா? சொந்த சௌகரியத்திற்காக அடுத்தவர்கள் சௌகரியத்தையும் கெடுப்பதற்கும் துணிந்திடுவார்கள். ஏற்கனவே வேறு ஒருவர் பேருந்து ஆசனத்தில் துண்டு போட்டு வைத்திருந்தாலும் அதைத் தூக்கி யாருக்கும் தெரியாமல் யன்னல் வழியாக எறிந்துவிட்டு அந்த இடத்தில் நல்ல பிள்ளை போல் இவர் உட்கார்ந்து விடுவார். துண்டு போட்டவர் வந்து கேட்டால் துண்டா? நான் பார்க்கவில்லை என்பார்.

இது மூன்றாவது ரகம். நாலாவது ரகம் எப்படி என்றால்... தனக்கு எந்த சௌகரியமும் இல்லை என்றால் கூட அடுத்தவர்களுக்கு ஏதாவது கெடுதல் செய்து கொண்டே இருப்பார்கள். அதில் ஒரு சுவாரஷ்யம்! இவர் பேருந்தில் உட்கார்ந்திருப்பார். இவருக்கு பக்கத்து ஆசனத்தில் ஒருத்தர் துண்டு போட்டுவிட்டுப் போயிருப்பார். இவர் அந்தத் துண்டை எடுத்து சத்தம் போடாமல் வெளியே போட்டு விட்டு கம் என்று இருப்பார். வேறு ஒருத்தர் வந்து சேர் இடம் காலியாக இருக்கா? உட்காரலாமா? என்பார்.

உட்காருங்கள் என்பார் இவர். அதற்குப் பின் துண்டு போட்டவர் வருவார். இரண்டு பேருக்கும் சண்டை வந்துவிடும். அந்த மனிதர் அதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருப்பார். இவர் நாலாவது ரகம். ஆக இப்படி நான்கு வகை மனிதர்கள். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால்... முதல் ரகம் சொன்னேன் அவர்கள் எங்கள் நாட்டில் குறைச்சல், மூன்றாவது–நான்காவது ரகத்தவர்கள் அவர்களும் நாட்டில் குறைச்சல்தான். இரண்ராவது ரகத்தவர்கள் நல்லவர்கள். அடுத்தவர்கள் சௌகரியத்திற்காக தங்களுடைய சௌகரியத்தை விட்டுக் கொடுக்க தயாராக இல்லாதவர்கள் தான் சமுதாயத்தில் ரொம்ப அதிகம்.

ஒரு சமுதாயத்தில் முதல் ரகமும் இரண்டாவது ரகமும் எவ்வளவு அதிகமாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அந்த சமுதாயம் நல்லவிதமாக இருக்கும். எங்களுடைய நாடு சுதந்திரம் அடைந்த சமயத்தில் முதல் ரகமும் இரண்டாவது ரகமும் அதிகமாக இருந்திருக்கிறது. இப்போதெல்லாம் நான்காவது ரகம் அதிகமாக இருக்கிறது போல் தெரிகிறது.

இந்த நிலைமை மாற வேண்டும் என்றால் முதல் ரகமான மனிதர்களை நாம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். சரி முதல் ரகமா? மூன்றாவது ரகமா? என்று எப்படிக் கண்டு பிடிப்பது? அவர்களுக்கு என்ன முகத்தில் எழுதியா ஒட்டி இருக்கும்?

நாங்கள் தான் சாமர்த்தியமாக அதைக் கண்டு பிடிக்க வேண்டும். வாக்குக் கேட்கின்ற முறையை வைத்துக் கூட அவர்கள் எந்த ரகம் என்பதை ஓரளவுக்கு கண்டு பிடிக்கலாம். ஒருத்தர் அப்படித் தான் வாக்குக் கேட்க வந்தார். அவர் வாக்குக் கேட்கின்ற முறையே தனி. அவர் எப்படி என்றால் ஒவ்வொரு வீடாகப் போவார். அந் தந்த வீட்டில் இருக்கிறவர் என்ன வேலை செய்கிறாரோ அதே வேலையை இவரும் செய்வார். அப்படிச் செய்து கொண்டே வாக்குக் கேட்பார்.

அதே மாதிரி ஒரு வீட்டுக்குப் போனார். இவர் போன நேரத்தில் அந்த வீட்டுத் தோட்டத்தில் அவர் கொத்திக்கொண்டிருந்தார். இவர் உடனே ஓடிப்போய் தானும் இன்னொரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு அவருக்குப் பக்கத்தில் கொத்த ஆரம்பித்தார். நெற்றி வியர்வை நிலத்தில் விழ கொஞ்சநேரம் கொத்தினார். அதற்குப்பின் மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

இது மாதிரி தேர்தலில் நிற்கிறேன். உங்கள் வாக்கை எனக்குப் போடுங்கள் என்றார். அது முடியாத காரியம்! என்றார் இவர். ஏன் என்று கேட்டார் இவர். ஏன் என்றால் நான் இந்த வீட்டுக்காரன் இல்லை. நானும் உங்களை மாதிரி வாக்குக் கேட்க வந்தவன் தான். அதுதான் கொத்திக்கொண்டிருந்தேன் என்றார் அவர்.

# டெங்குக் காய்ச்சல் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும்

## வைத்தியர் தேவநேசன் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் மழையுடனான காலநிலை நிலவுவதால் பொதுமக்கள் டெங்கு நுளம்பு தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.தேவநேசன் அறிவுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்.மாவட்டத்தில் அடிக்கடி பெய்துவரும் மழை காரணமாக டெங்கு நோய் ஏற்படக்கூடிய சூழல், வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாகவும், இதுவரை டெங்கு நோய்த் தாக்கம் தொடர்பில் பாதகமான முடிவுகள் கிடைக்கப்பெற வில்லை எனவும் தெரிவித்தார்.

இருப்பினும் ஊர்காவற்றுறைப் பகுதிகளில், டெங்கு நுளம்புகள் பெருகுவதற்குரிய சாதகமான சூழல் அதிகரித்துள்ள நிலையில் சுகாதாரத் துறையினருக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கடந்த சில ஆண்டுகளில்

# யாழ்.மாவட்டத்திற்கு மாத்திரம் 6500 மில்லியன் நிதிஒதுக்கீடு

(சாவகச்சேரி)

தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஊடாக கடந்த சில ஆண்டுகளில் யாழ்.மாவட்டத்திற்கு மாத்திரம் 6500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

கம்பரெலியத் திட்டத்தின் ஊடாக யாழ்.மாவட்டத்திற்கு 2800 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் மிக மோசமான நிலையில் காணப்பட்ட பல உள்ளூர் வீதிகள் புனரமைக்கப்பட்டன. அத்துடன் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழும் யாழில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனை விட மயிலிட்டி துறைமுகம், குருநகர் துறைமுகம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் பருத்தித்துறையில் நவீன வசதிகளுடன் துறைமுகம் ஆகிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன் பலாலி விமான நிலையத்தை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாக மாற்றும் நீண்டகால வேலைத் திட்டமும் யாழில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கும் வேலைத் திட்டமும் மீள்குடியேற்ற அமைச்சின் அனுசரணையோடு இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30)

# உயிர் அச்சுறுத்தல் குறித்து சிவாஜிலிங்கம் முறைப்பாடு!

(கரணவாய்)

தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தனக்கான பாதுகாப்பை வழங்குமாறு கோரி எம்.கே. சிவாஜிலிங்கம் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந் நிலையில் அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்.

அதில் வட்ஸ் அப் ஊடாக தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தனக்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறு கோரியே அவர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# ஆளுநரின் அறிவுறுத்தலில் தொழிற்பயிற்சி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் அறிவுறுத்தலுக்கமைவாக வடமாகாணத்திலுள்ள வேலையற்ற இளைஞர்களை தேசிய ஊழியர் படையணியில் இணைத்துக்கொள்வதற்கும், தொழிற்தகுதி மற்றும் தொழில் விருத்தி செயற்றிட்டத்தின் கீழ் தேசிய தொழிற்தகுதிச்சான்றிதழ்களை (NVQ) வழங்குவதற்கான குறுங்காலத் தொழிற்பயிற்சி தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இம்மாதம் இடம்பெறவுள்ளது.

ஆளுநர் செயலகம் , மாவட்டச் செயலகம் மற்றும் Hightec Lanka International ஆகியன இணைந்து 5 மாவட்ட செயலகங்களிலும் நடத்தவுள்ள இக் கருத்தரங்கில் மின் இணைப்பாளர், கனரகவாகன இயக்குனர், கட்டுமானப்பணியாளர், வாகனம்திருத்துநர், AC திருத்துநர், தளமேற்பார்வையாளர், AutoMobile, AutoElectrical Technician போன்ற பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. எனவே ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ள முடியும்.

இது தொடர்பான பதிவுகளை பிரதேச செயலகங்களில் பதிவு செய்தவர்கள் மற்றும் பதிவுகளை மேற்கொள்ள தவறியவர்களும் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் இடம்பெறுகின்ற செயலமர்வுகளில் கலந்து கொண்டு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இதில் நாளை மறுதினம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை யாழ்.மாவட்டச் செயலகத்திலும், பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும், 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 2.30 மணிவரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும், 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணி வரை வவுனியா மாவட்ட செயலகத்திலும், 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 2.30 மணிவரை மன்னார் மாவட்ட செலகத்திலும் தொழிற் பயிற்சி கருத்தரங்கு நடைபெறும். (இ-5)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கென உறுப்பினர்களுக்கு நிதிஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையினர் 2020ஆம் ஆண்டிற்கான பாதீட்டை 17.071மில்லியன் ரூபாய் நிதியை உள்ளடக்கியதயாகத் தயாரித்து வருகின்றனர்.

2019ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் 12மில்லியன் ரூபாய் நிதி மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2020ஆம் ஆண்டிற்கான பாதீடு மேலும் ஐந்து மில்லியன் ரூபாய் நிதி அதிகரிப்புச் செய்து தயாரிக்கப்பட்டு வருகிறது.

குறித்த சபை நிதி ஒதுக்கீட்டில் சபையில் உள்ள 31 உறுப்பினர்களுக்கும் தலா ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்ட குறித்த நிதி ஒதுக்கீட்டை உறுப்பினர்கள் சிலர் இணைந்து பயனுள்ள அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள முடியும் எனவும், விரும்பாத பட்சத்தில் தனித்தனியாக அபிவிருத்தி திட்டங்களை குறித்த ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. உறுப்பினர்கள் தமது நிதி ஒதுக்கீட்டில் வீதிகள் புனரமைப்பு, மயானங்கள் புனரமைப்பு, நூலகங்கள் விஸ்தரிப்பு ,வீதி விளக்கு பொருத்தல் மற்றும் சுகாதார சேவைகள் உள்ளிட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும் எனவும் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் உறுப்பினர்கள் தமது முன்மொழிவுகளை பிரதேசசபையில் ஒப்படைக்க வேண்டும் எனவும் தவிசாளர் தெரிவித்தார். 2019 ஆம் ஆண்டு பாதீட்டில் சபை உறுப்பினர்களுக்கு தலா 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# வாணி விழா

(சாவகச்சேரி)

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கம் நடாத்தும் வாணி விழா இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் கைதடி கிழக்கு சனசமூக நிலைய அம்பலவாணர் கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினராக யா/நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன், கௌரவ விருந்தினராக கொழும்பு வெலிகம ஸ்ரோர்ஸ் உரிமையாளரான க.ச.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள், பட்டிமன்றம், சிறுப்பிட்டியூர் சத்திய தாஸ் வில்லிசைக்குழுவின் "தீர்க்க சுமங்கலி" வில்லுப்பாட்டும் இடம்பெறும். (இ-5)



தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அ. பிறேம்சங்கர், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


(படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154H(3)-** இரண்டாம் பந்தியின் 154H(2) கீழ் ஆளுநரினால் நியதிச் சட்டம் ஒன்று மாகாண சபையொன்றுக்கு திருப்பியனுப்பப்படுகின்றவிடத்து, மாகாண சபையானது ஆளுநரின் செய்தியைக் கவனத்திற் கொண்டு நியதிச் சட்டத்தை மீளச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். அத்துடன் திருத்தத்துடன் அல்லது திருத்தம் இன்றி அத்தகைய நியதிச் சட்டத்தை நிறைவேற்றலாம் என்பதுடன் அதனை ஆளுநரின் சம்மதத்துக்கென அவருக்குச் சமர்ப்பிக்கவும் செய்யலாம்.

**13 ஆவது திருத்தத்தில் உறுப் புரை 154H(4)-** நியதிச் சட்டம் ஒன்று மூன்றாம் பந்தியின் 154H(2) ஆளுநருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் மேல், ஆளுநர் நியதிச் சட்டத்துக்கு சம்மதமளிக்கலாம் அல்லது அது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இல்லை எனத் தீர்மானிக்கப்படுவதற்காக இரண்டாவது தடவையாக நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், ஜனாதிபதியினால் உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுவதற்கென அதனை ஒதுக்கலாம். அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன்மீது நியதிச் சட்டம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகின்றதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து ஆளுநர் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் அவருக்குக் கிடைக்கப் பெற்றதன் மீது நியதிச் சட்டத்திற்குச் சம்மதமளித்தல் வேண்டும். அவ்வாறு ஆற்றுப்படுத்தப்படுத்தப்பட்டதன் மீது நியதிச் சட்டம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாயிருகின்றதென உயர் நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து ஆளுநர் நியதிச் சட்டத்திற்கான சம்மதத்தை நிறுத்தி வைத்தல் வேண்டும்.

குறிப்பு:- நிதிசார் கருமங்கள் தொடர்பிலான நியதிச் சட்டங்களின் சிறப்பு நடவடிக்கை முறை பற்றி 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 24 ஆவது சரத்தில் விபரமாகக் கூறப்பட்டுள்ளதோடு குறைநிரப்பு நிதி ஒதுக்கீடு, நிதி ஒதுக்கீடு நியதிச்சட்டங்கள் பற்றி 27, 28 மற்றும் 29 ஆவது சரத்துக்களில் விபரமாகக் கூறப்பட்டுள்ளது.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154S(1)-** ஒரு மாகாண சபை தீர்மானம் வாயிலாக ஒன்பதாம் அட்டவணையில் உள்ள மாகாணசபை நிரலில் (நிரல் I) அல்லது ஒருங்கிணை நிரலில் (நிரல் III) தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் உறுப்புரை 154G யின் கீழான அதன் தத்துவங்களை பிரயோகிக்காது இருப்பதற்கு முடிவு செய்யலாம்.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154S(2)-** உறுப்புரை 154S(1) இன் கீழ் மாகாண சபை ஒன்றால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் அத்துடன் அத்தகைய தீர்மானத்தின் நியதிச் சட்டம் பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருக்குமிடத்து உறுப்புரை 154G இன் கீழான அத்தகைய மாகாணசபையின் தத்துவங்கள் அத்தீர்மானத்தில் கூறப்பட்ட விடயத்திற்கு நீடிப்பதாக கருதப்படாது இருப்பதோடு பாராளுமன்றம் அந்த விடயத்திற்கு உறுப்புரை 154G ஐத் தவிர்ந்த வேறு வழியில் அம்மாகாணத்திற்கு ஏற்புடையதான சட்டத்தை ஆக்கலாம்.

### நியதிச் சட்டத்தை ஆக்குவதற்கான படி முறைகள்

ஒரு நியதிச் சட்டத்தை இயற்றுவதில் பல படிமுறைகள் உள்ளன. ஒரு புதிய நியதிச் சட்டத்தை முன்மொழிகின்ற அமைச்சின் செயலாளர், பேரவையின் செயலாளர், ஆளுநரின் செயலாளர் என்போர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்னவென்பது மஞ்சுளா கஜநாயக்காவினால் தொகுக்கப்பட்ட "Provincial Council Statutes of Sri Lanka -a Comparative Analysis – 2010" என்னும் நூலில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு புதிய நியதிச் சட்டத்தை முன்மொழிகின்ற அமைச்சு அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். ஒரு மாகாண சபை, மாகாண சபைப் பட்டியல் மற்றும் ஒருங்கிணைப் பட்டியல் ஆகியவற்றிலுள்ள விடயங்கள் தொடர்பான நியதிச் சட்டங்களை ஆக்க முடியும். ஆனால் ஒருங்கிணை பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு முதலில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

நிதி சம்பந்தமான நியதிச் சட்டமானால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கு முன் ஆளுநரின் உறுதிப்படுத்தல் பெறப்படல் வேண்டும். (மாகாண சபைச் சட்டம் 1987 இன் இல. 42, சரத்து 24). எந்தவொரு நியதிச் சட்டத்தையும் வகுப்பதற்கு முன்பு அந்த விடயம் சம்பந்தமாக ஏற்கனவே 13 ஆவது திருத்தத்திற்கமைய பாராளுமன்றத்தால் ஏதேனும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதா? என்று விசாரணை நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இயற்றப்பட்டிருப்பின் அந்த விடயத்திற்கு நியதிச் சட்டம் இயற்ற முடியாது. இது பொதுவாக ஒருங்கிணங்கிய பட்டியலில் உள்ள விடயங்களுக்கே பொருந்தும். எனவே மாகாண சபைகள் ஒருங்கிணங்கிய பட்டியலில் உள்ள விடயங்களுக்கு நியதிச் சட்டத்தை காலதாமதமின்றி தயாரித்துக் கொண்டால் இவ்வாறான பிரச்சினைகள் எழுமாட்டா.

> **ஒரு நியதிச் சட்டத்தை இயற்றுவதில் கருத்தில் கொள்ளவேண்டிய படிமுறைகள், அமைச்சின் செயலாளர், பேரவையின் செயலாளர், ஆளுநரின் செயலாளர் ஆகியோரின் கடமைகள் பற்றி மஞ்சுளா கஜநாயக்காவினால் தொகுக்கப்பட்ட** "Provincial Council Statutes of Sri Lanka -a Comparative Analysis – 2010" **என்னும் நூலில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.**

### நியதிச் சட்டங்கள் விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சரின் செயலாளரின் செயற்பாடுகள்


நியதிச் சட்டங்கள் அவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும். எனவே அவ் அமைச்சின் செயலாளரின் பொறுப்புகளில் சிலவற்றை ஒரு நியதிச் சட்டத்தை தயாரிப்பதற்கான தேவை பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரின் ஆலோசனையைப் பெறுதல். நியதிச் சட்டத்தின் தேவையையும் குறிக்கோளையும் நிறைவு செய்யக் கூடியதாக வரைவினைத் (draft) தயாரித்தல். குறிப்பாணையையும் (memo) அதன் பின்புலம் பற்றிய கடிதத்தையும் தயாரித்து அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல். அமைச்சரவை அதற்கு அனுமதி தந்தால் நியதிச்சட்டத்தின் வரைவினை மாகாண சபையின் பிரதான செயலாளர் ஊடாக ஆளுநருகுச் சமர்ப்பித்தல். ஆளுநரின் அறிவுரைக்கு அமைய மும்மொழிகளிலும் நியதிச்சட்டத்தின் வரைவினை தயாரித்தல். நியதிச்சட்டத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் சார்பாக அவரின் செயலாளர் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக ஒரு அறிவிப்பைத் தயாரித்து முதல் அமைச்சரிடம் சமர்ப்பித்தல் என்றவாறு குறிப்பிடலாம்.

### நியதிச் சட்ட வரைவு சம்பந்தமாக பேரவையின் (Council) செயலாளரின் செயற்பாடுகள்

பேரவையின் (Council) செயலாளரின் செயற்பாடுகளாக குறிக்கப்படுவது யாதெனில் நியதிச் சட்ட வரைவினை பேரவையின் ஒப்புதலுக்காகப் பெற்றவுடன், அதனை அவைத்தலைவருக்கு வழங்குதல், மாகாண சபை நிகழ்ச்சி நிரலில் சேர்த்தல், பிரதிகளை அமைச்சர்களுக்கு அனுப்புதல், வரைவு வழங்கிய திகதி சமர்ப்பிக்கும் விபரங்களை ஹான்சார்ட்டில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், அதனை மறு ஆய்வு செய்ய சட்ட வரைவுக் குழுவுக்கு அறிவித்தல், அக் குழுவின் பரிந்துரைகளை நியதிச் சட்டம் உருவாக்கிய அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல், தலைவரின் உறுதிப்படுத்தலுடன், ஆளுநருக்கு அவரது ஒப்புதலுக்காக அனுப்புதல். ஆளுநரின் ஒப்புதல் கிடைத்ததும் அந்நியதிச் சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுத்தல் போன்றவையாகும்.

### நியதிச் சட்டவரைவு சம்பந்தமாக ஆளுநரின் செயலாளரின் செயற்பாடுகள்

நியதிச் சட்ட வரைவு சம்பந்தமாக ஆளுநரின் செய லாளரின் செயற்பாடுகளாக குறிக்கப்படுவது யாதெனில் நியதிச் சட்ட வரைவு குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற தேவையான நடவடிக்கை எடுத்தல். ஆளுநரின் ஒப்புதலுக்காக நியதிச் சட்ட வரைவை கூடிய விரைவில் சமர்ப்பித்தல், அத்த கைய ஒப்புதல் வழங்கப்பட்டால், உத்தரவின் திகதியைச் செரு கல், பேரவையின் (Council) செயலாளருக்கு அறிவித்தல் போன்றவையாகும்.




படம்-1

தொடரும்...

# தேசத்துக்கு நல்ல தீர்வு கொண்டு

## வல்லிபுர ஆழ்வார் தேரேறி வருகிறார்

ஈழமணி திருநாட்டை அலங்கரிக்கின்ற திருக்கோயில்களில் வடமராட்சியில் அமைந்த வல்லிபுரக் கோயில் உன்னதமான ஒரு இடத்தை வகிக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வகையில் பெருஞ்சிறப்புப் பெற்றது இவ்வாலயம்.

வல்லிபுரக் கோயில் அமைந்துள்ள மணற்பாங்கான பிரதேசமும் அதன் அருகிலுள்ள கடலும் ஆலயத்திற்கு அழகூட்டி நிற்கின்றன. பருத்தித்துறை பிரதேசத்தின் வல்லிபுரப் பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார் பெருமானின் இத்திருத்தலம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மிகப் பழைமை வாய்ந்த வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

சக்கரத்தை மூலக்கருவறையில் வைத்துத்தாபித்து வழிபடும் ஒரேயொரு தலம் என்னும் சிறப்பு இவ்வாலயத்துக்கு உண்டு. இதன் அமைப்பை நோக்குமிடத்து இந்தியாவில் உள்ள ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலய அமைப்பை ஒத்திருக்கின்றது.

பெருமானின் தச அவதாரங்களுள் ஒன்றாகிய ‘‘மச்ச அவதாரம்’’ இங்கு நிகழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது.

அலைகள் ஆர்ப்பரிக்கும் பாக்கு நீரினை ஓரத்திலே நர்த்தனனாக எழுந்தருளி, மாய விந்தைகளால் அடியார்களைக்கட்டி அவர்கள் முழுப்பேற்றினையடைய வல்லிபுரமாயவனாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

சப்த (ஏழு) தள இராஜகோபுரம் ஓங்கி உயர்ந்து விண்ணை முட்டி ஆலய எழிலை உயர்த்தி நிற்கிறது. அதிலுள்ள சிலைகளும் சிற்பங்களும் தல வரலாற்றை சுட்டி நிற்கின்றது.

“சுதர்சனச் சக்கர வழிபாடு”

ஸ்ரீமந்நாராயணனுக்கு அமைந்த ஆயுதங்கள் ஐந்தாகும். இந்தப் பஞ்சாயுதங்களே நாராயணனுக்கு திவ்ய ஆபரணங்களாகவும் விளங்குகின்றன. நாராயணனுக்கு வைகுந்தத்தில் இருந்து பணி செய்வதே பஞ்சாயுதங்களின் பெரும் பேறாகும். ஆயுதங்களாகவும் திருவடிநிலையாகவும் பட்டுப் பீதாம்பரமாகவும் படுக்கையாகவும் தலையணையாகவும் குடையாகவும் சிங்காதனமாகவும் பலநிலைகளிலும் உருவெடுத்து அடிமைப் பணி செய்வர்.

இவர் பஞ்சா யுதங்களின் முதன்மை பெற்றவர். இவர் என்றுமே இறைவனை விட்டுப் பிரியாதவர். சுதர்சனமே விஷ்ணுவாகும். விஷ்ணுவே சுதர்சனமாகும். சுதர்சனச் சக்கரமானது இறைவனைப் போலவே ஆதியந்தமெதுவுமில்லாததாகும்.

எந்தவொரு ஆலயத்திலுமில்லாத சிறப்பு “சங்கர ஆயுதம்” மூல மூர்த்தியாக எழுந்தருளி இருப்பது. அந்த மூர்த்தி இன்று அபயம் தந்து எம்மை காவல் செய்து வாழ்விக்க திருத்தேரில் ஆரோகணித்து வருகின்றார். ஈழத்தமிழர்கள் மட்டுமன்றி உலகத்தமிழர்களின் வரலாற்றில் சிறப்புப்பெற்ற வல்லிபுர மாயவனின் வளமான திருவருளோடு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்



வல்லிபுர மாயவரின் தேர்த்திருவிழா இன்று

### பாவம் சுமந்த வடக்கயிறு

எமக்காக அவதாரமெடுத்து ஆங்கே
எம் பாவங்களை ஓட்டும் பவனி
பாமர ராகிய நாமும் தேவர்களும்
வடம் பிடித்திழுக்கும் பவனி
பார்க்க வாரீர் பாவங்களை தொலைக்க
வாரீர் அவன் அருள் பெற வாரீர்,
லீலைகள் பல செய்வான் கண்ணன்
விசப் பூச்சிகளால் தன்னை காட்டிடுவான்.

ம.கணேசலிங்கம்.

# புரட்டாதி சனி நான்காவது வாரம்

## பரமேஸ்வரனைப் படுத்திய சனீஸ்வரன்



சனீஸ்வரன் சர்வ வலிமை பெற்றவர்ள. பரமேஸ்வரனே அவருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து சனீஸ்வரன் என்று தனக்கு அடுத்த ஸ்தானத்தை அளித்து பெருமைப்படுத்தினார். ஆனால் அதே பரமேஸ்வரனையும் சனீஸ்வரன் விட்டு வைக்கவில்லை. பரமேஸ்வரன் கட்டளைப்படி சனீஸ்வரன் மானிடர், தேவர், அரக்கர் ஆகிய அனைவர் வாழ்க்கையிலும் சிற்சில காலங்களில் தன் வல்லமையைக் காட்டி வருகிறார். மகா நிதிமானான சனீஸ்வரன் அநீதியாக நடந்து கொள்வதே இல்லை. ஒரு சமயம் பரமேஸ்வரனை சனீஸ்வரன் சிறிது காலம் பற்ற வேண்டியிருந்தது. இதை பரமேஸ்வரனிடமே சொன்னார். அப்போது பரமேஸ்வரன் “அப்படியானால் உன்னால் என்னை பற்ற முடியுமா?” எனக் கேட்டார். அந்தக் கணமே அங்கிருந்து மறைந்தார். பரமேஸ்வரன் கைலையிலிருந்து பூலோகத்திற்கு வந்து ஒரு தாமரைத்தடாகத்தில் தாமரைத் தண்டில் மறைந்து கொண்டார். மூன்றே முக்கால் நாழிகையின் பின் வெளிப்பட்டார். அப்போது அவர் எதிரில் சனீஸ்வரன் நின்று இருந்தார்.

பரமேஸ்வரன் உன்னால் என்னை பற்ற முடிந்ததா? எனக் கேட் டார். சனீஸ்வரன் சாந்தமாகச் சொன்னார், “தேவதேவனே தாங்கள் வாக்களித்த வரங்களின் பலத்தாலும் தங்களுடைய கட்டளைப்படியும் நீதி தவறாமல் என் கடமையை செய்து வருகிறேன். தாங்கள் கட்டளைப்படி உங்களையும் நான் சிறிது சோதனைக்குள்ளாக்க வேண்டியிருந்தது. அதற்காக அனுமதி கேட்டேன். நீங்கள் கொடுத்த வரத்தையும் கட்டளையையும் மறந்து உங்கள் வலிமையை காட்ட தொடங்கினீர்கள். உங்கள் கட்டளையின் முன் உங்களுடைய வலிமை பயனற்றுப்போய் விட்டது. அதனாலேயே மூன்றே முக்கால் நாழி தாமரைத்தண்டினுள் மறைந்திருந்தீர்கள்.’’ பரமேஸ்வரன் மகிழ்ந்து ‘‘சனீஸ்வரனே நான் என் வரத்தையோ கட்டளையையோ மறக்கவோ அலட்சியப்படுத்தவோ இல்லை. உன் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டவே இப்படிச் செய்தேன்’’ என்று கூறி மேலும் பல வரங்களைக் கொடுத்து மறைந்தார்.

ஒரு மனிதன் நேர்மையாகவும் பிறர் சொத்தை அபகரிக்காமலும் பேராசையின்றி தனது கடமைகளை இயற்றுவானாகில் சனீஸ்வரன் எத்தீங்கும் செய்யமாட்டார்.

-சிவனடியான்-

# சாவகச்சேரி பிரதேச சபை பாதீட்டில் கொடிகாமம் சந்தைக்கு நிதிஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையினர் 2020 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் கொடிகாமம் பொதுச்சந்தைப் புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேசசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் தயாரித்தல் தொடர்பாக கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதேசசபையில் இடம்பெற்ற போதே சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவுக்கு ஒதுக்கிய 17.071 மில்லியன் நிதியிலிருந்து ஒரு மில்லியனுக்கு குறையாத நிதியை கொடிகாமம் பொதுச்சந்தையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஒதுக்குவதென முடிவெடுத்தனர்.

இது தொடர்பாக செயலாளர் கருத்து தெரிவிக்கையில்.

கடந்த காலங்களில் வேறு திட்டங்களில் கொடிகாமம் பொதுச் சந்தைக்கு ஒதுக்கீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் சந்தையை நவீனமயப்படுத்தும் எதிர்பார்ப்பிலும் வரவு - செலவுத் திட்டத்தில் சந்தைக்கென நிதி ஒதுக்கப்படவில்லை. அந்த வகையில் இம்முறை வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கொடிகாமம் பொதுச்சந்தையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

வடிகால் திருத்தம், பொது மலசலகூடத் திருத்தம் மற்றும் கடைத் தொகுதிகளுக்கான கூரைத் திருத்தம் ஆகிய திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

அத்துடன் வேறு திட்டங்களின் ஊடாக எதிர்வரும் முதல் அரையாண்டு பகுதியில் கொடிகாமம் சந்தை அபிவிருத்திக்கென நிதி கிடைக்கும் பட்சத்தில் குறித்த நிதி வேறு திட்டங்களுக்கு மாற்றியமைக்கப்படும் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

சாவகச்சேரி பிரதேசசபையினர் கொடிகாமம் பொதுச்சந்தையை நவீன மயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதுடன். அதற்கான மதிப்பீடுகளையும் தயார் படுத்தி உரிய நிதியை எதிர்பார்த்து காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. --- (5-30)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கண்ணன் கண்ணராசன் எழுதிய சிந்தனைத் திடரில் சிதறிய துகள்கள் நூல் வெளியீட்டு விழா நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் ஓட்டுசுட்டான் மகா வித்தியாலய தமிழாசிரியர், கவிஞர் வே.முல்லைத்தீபன் தலைமையில் நடைபெறும். (இ-5)







யாழ்.வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

# காலி முகத்திடலை சுத்தம் செய்த ரோசி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸாவை ஆதரித்து கொழும்பு காலி முகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தை அடுத்து துப்புரவு செய்யும் பணிகளில் மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க தலைமையிலான அணியினர் ஈடுபட்டனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கான மக்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் பறைசாற்றும் விதமாக நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் முதலாவது பேரணி இடம்பெற்றது.

இதில் அதிகளவிலான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் மக்கள் பயன்படுத்திய போத்தல்கள், பொலித்தீன்கள் என்பன வீசப்பட்ட நிலையில் அதனை துப்புரவு செய்யும் பணி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சின்மயாமிஷனின் வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயாமிஷனின் நவராத்திரி செயற்பாடுகளின் நிறைவாக வாணி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் நடைபெறும்.

இதில் கலை நிகழ்ச்சிகளும் நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம்பெறும். (இ-7)

# யுத்தத்தால் வீழ்ந்த எம் தேசத்தை கட்டியெழுப்ப முன்வாருங்கள்

## இளைஞர், யுவதிகளுக்கு ஆளுநர் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

**யுத்தத்தால் வீழ்ந்து போன எம் தேசத்தைக் கட்டியெழுப்பவும் எமது தேசத்திற்குச் சொந்தமான நாகரிகத்தை வளர்ப்பதற்கும் இளைஞர், யுவதிகள் முன்வர வேண்டும் என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அழைப்பு விடுத்தார்.**

கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழிற்பயிற்சி சான்றிதழ்களின் உதவியுடன் தொழில்வாய்ப்புப் பெற்று சிலர் வெளிநாடு செல்லலாம். அப்படிச் சென்றாலும் உங்கள் தேசத்தை மறக்காதீர்கள். நீங்கள் பிறந்து வளர்ந்த தேசம் இது. எல்லாவற்றுக்கும் அப்பால் உயிரினும் மேலான அன்பு கூருகின்ற எங்கள் இல்லம் எமது தேசம். ஆகவே நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் தேசத்தை மறக்காமல், சொந்த மண்ணை மறக்காமல், அந்த மண்ணின் பண்பாட்டை மறக்காமல், அதன் எதிர்காலத்தை மறக்காமல் வாழ வேண்டும். இந்தக் கரிசனையும், தொலைநோக்கையும் சகலரும் இதயத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் உங்கள் வாழ்வு சீராக அமையும்.

வடக்கின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அநேக வழிகள் உள்ளன. அதில் ஒரு வழிதான் தொழில்நுட்ப தொழில் வாய்ப்பு. தொழிற்பயிற்சி அதிகார சபையால் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றிதழ் வழங்கி வைக்கப்படுகிறது. அந்த வகையில் இன்று (நேற்று) மூன்றாம், நான்காம் தரச் சான்றிதழ்களை நீங்கள் பெற்றுக் கொள்வது மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனெனில் போர் எம்மைத் தாக்கியது மட்டுமல்லாமல் எமது சமுதாயத்தின் அத்திபாரத்தின் முக்கிய இடங்களையும் பாதித்துள்ளது. அந்த அத்திபாரத்தை மீண்டும் செம்மைப்படுத்த வேண்டும். கட்டி எழுப்பப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆகையால் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவது, அவர்களுடைய திறமையை ஊக்கப்படுத்துவது. அவர்களுக்கு தேவையான பயிற்சியையும் அந்தப் பயிற்சி பெற்றமைக்கான உலகம் அறிவதற்கான சர்வதேசத்தரச் சான்றிதழ்கள் கொடுக்க வேண்டியது எமது பொறுப்பு. நாம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாடசாலைக்கோ, கல்வி நிறுவனங்களுக்கோ சென்றிருக்காத துறைசார் நிபுணர்கள் 200 பேருக்கு அந்தத் துறையில் ஈடுபட்டதற்கான சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழை வழங்கி இருந்தோம்.

போர் முடிவடைந்து பத்து வருடங்கள் ஆகியும் இன்றும் அடிப்படை வசதிகள் பலவற்றை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. அந்தப் பணியிலே எனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை குறுகிய காலத்திற்குள் நான் செய்திருக்கிறேன் என்பது இறைவனுக்கும் எனக்கும் என்னோடு சேர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் சிறிய குழுவிற்கும் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1855

### விஸ்ணு

பேப்பர்ல Good வாங்கினவனை விட வாத்தியார்கிட்ட கொட்டு வாங்கினவன் தான் இப்ப எல்லாம் நல்லா இருக்கிறான்!



### விமேஸ்

சேர்ந்தே வருவது?
சம்பளமும் செலவும்
சேராமல் இருப்பது?
மனதில் மகிழ்ச்சி வங்கியில் இருப்பு



### லக்சிகா

இதெல்லாம் நான் வெளிய சொன்னா சிரிச்சுருவாங்க...



### சுபராஜ்

ஏண்டா உங்க அப்பா எந்தநேரமும் உன்னை திட்டிகிட்டே இருக்காரு....



சிங்கத்தை கொஞ்ச முடியாதுல்ல. அதுதான்....

### தயாபரன்

சார்...சார் என் பொண்டாட்டிய காணோம்...
யோ...இது போஸ்ட் ஆபிஸ்...




அய்யோ... சந்தோஷத்துல எங்க போறதுன்னே தெரியல..!

### தனுசா

பெண்: ஹலோ இது கஸ்டமர் கேர் தானே?
கஸ்டமர் கேர்: ஆமாம் சொல்லுங்க மேடம்
பெண்: என் ஐந்து வயசு பையன் சிம் கார்டை விழுங்கிட்டான்
கஸ்டமர் கேர்: அப்படினா டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போங்க மேடம்.
பெண்: இல்லை அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சி அது அவன் பேசும் போது காசு போகுமா சார்?
கஸ்டமர் கேர்: ????

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராணுவம் மறுசீரமைக்கப்பட வேண்டும்

## தளபதி சவேந்திர சில்வா வலியுறுத்து



(கொழும்பு)

வேகமாக மாறிவரும் சமூக பாதுகாப்புத் தேவைகளுக்கு இணங்க இராணுவம் ஒரு சிறந்த தொழில் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று கருதுவதாக இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் 23 ஆவது இராணுவ தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் நேற்று முன்தினம் 10 ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்ற இராணுவ நினைவு தின விழாவில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், இராணுவத்திலுள்ள 210 அதிகாரிகள் மற்றும் 7000 படை வீரர்களுக்கு இராணுவத் தளபதியால் பதவியுயர்வு வழங்கப்பட்டது.

சவேந்திர சில்வா மேலும் உரையாற்றுகையில், "இந்த கண்ணியமான சந்தர்ப்பத்தில், இலங்கை இராணுவத்தின் பெருமைமிக்க வரலாற்றை சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இலங்கையானது பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் இராணுவத்தின் முதல் இராணுவத் தளபதியாக பிரிகேடியர் ரொட்ரிக் சின்க்ளேயர் நியமிக்கப்பட்டார். 22 ஆண்டு காலமாக இருந்த இராணுவத் தளபதிகளின் கட்டளையின் பிரகாரம் இலங்கை இராணுவமானது அனைத்து சவால்களையும் துணிந்து தனது அர்ப்பணிப்பு மற்றும் உறுதியான பணியைத் தொடர்ந்து வந்தது என்பதை இத்தருணத்தில் கூறவிரும்புகின்றேன்.

அத்துடன், 70 ஆண்டு இராணுவ நிகழ்வின் போது 23 ஆவது இராணுவத் தளபதியாக உங்கள் முன் உரையாற்றுவதை நான் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

### ஜனாதிபதிக்கு நன்றி

இலங்கை இராணுவத்தில் மிக உயர்ந்த பதவியான இராணுவத் தளபதி பதவியை என் மீது நம்பிக்கை வைத்து எனக்கு வழங்கிய ஜனாதிபதிக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை இத்தருணத்தில் கூறவும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

முப்படைகளின் பிரதானியும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் வழிக்காட்டலின் கீழ் இலங்கை இராணுவமானது நாட்டில் நற்பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 70 ஆண்டுகளில் தேசத்தின் பாதுகாவலராக இலங்கை இராணுவம் நாட்டிற்கு எதிராக முன்வைத்த பல சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு முகமளித்து நாட்டின் இறையாண்மைக்காகவும் மக்களை பாதுகாக்கவும் சிறந்த பணிகளில் ஈடுபட்டிருந்தது.

ஏற்பட்டிருந்த சவால்களுக்கு முகமளித்து, தேசிய அபிவிருத்தி நோக்கங்களை துரிதப்படுத்தி நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாம் எமது பங்களிப்பை வழங்க வேண்டும். தேசிய பாதுகாப்பு என்ற கருத்தை மேலும் வலுப்படுத்தும் அதேவேளையில், வேகமாக மாறிவரும் சமூகப் பாதுகாப்புத் தேவைகளுக்கு இணங்க இராணுவம் ஒரு சிறந்த தொழில் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோல், இராணுவத் தளபதியாக நான் எனது எதிர்காலத்தை சிந்தித்து நான்கு முக்கிய விடயங்களுக்கு முன்னுரிமைகள் அளித்துள்ளேன்.

### தேசிய பாதுகாப்பு கடுமையாக அமுலாகும்

அதாவது தேசிய பாதுகாப்பை கடுமையாக அமுல்படுத்துதல், மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் இராணுவத்தின் முன்னேற்றம் மற்றும் இராணுவ சமூகத்தின் நலன் மற்றும் முன்னேற்றம் போன்ற விடயங்களாகும்.

எந்தவொரு இராணுவத்திலும் முன்னுரிமை பாத்திரமாக இருப்பதால், நாட்டின் பாதுகாப்பைப் பாதுகாக்க நாம் தவறாமல் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதன்மூலம், சந்தேகம் அல்லது பயம் இல்லாத ஒரு சமூக சூழலின் விடியலுக்காக இடத்தை உருவாக்க முடியும். பயிற்சி மற்றும் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்துவதன் மூலம் சிப்பாயை ஒரு முழுமையானவராக மாற்றுவதன் மூலம், ஒரு நாடு என்ற எதிர்பாராத எந்த அச்சுறுத்தலையும் திறம்பட எதிர்கொள்ள முடியும். அதற்காக நாம் அனைவரும் நன்கு தயாராக இருக்க வேண்டும்.

மேலும், இராணுவத்தின் தரமான அம்சத்தை உயர்த்தும் நோக்கில் தேவையான கொள்கை முடிவுகளை எடுப்பதன் மூலம் இராணுவத்தின் முன்னோக்கி அணிவகுப்பை மேம்படுத்துவதில் எனது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மறுபுறம், நலன்புரி வசதிகளை மேம்படுத்துவதோடு, கடமைகளை திறம்படச் செயற்படுத்துவதற்கான அனைத்து தேவைகளையும் வழங்குவதும் ஒவ்வொருவரும் தங்கள் பங்குகளை மனநிறைவுடன் செய்ய உதவுவர் என்று நான் நம்புகிறேன்.

அதன்படி, அந்த நோக்கங்களை அடைவதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும் ஏழு கருத்துகளையும் நான் முன்மொழிந்தேன். அதாவது, தேசிய பாதுகாப்பு, தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான பங்களிப்பு, இராணுவப் பணியாளர்களின் திறன்கள் மற்றும் கல்வித் திட்டங்களை மேம்படுத்துதல், அனைத்து அணிகளின் தொழில் ரீதியான நடத்தை களை மேம்படுத்துதல், ஓய்வுக்கு முந்தைய காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு தொழில் பயிற்சி அளித்தல், அதிகாரிகளுக்கான நலன்புரி வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பிற அணிகளும் தற்போதைய சவால்களை எதிர்கொள்ள இராணுவத்தின் நவீனமயமாக்கலும் அந்தக் கருத்துகளில் உள்ளடக்கப்படும். வழிகாட்டுதல், தலைமை மற்றும் ஊக்கத்தொகைகள், அந்தக் கருத்துகளின் அடிப்படையில் வழங்கப்படுவது பயனுள்ள முடிவுகளைத் தருவதற்கான ஒரு குழுவாக பணியாற்ற பங்களிக்கும் என்று நான் நம்புகிறேன்.

எந்தவொரு தயக்கமும் இல்லாமல் இராணுவத்தினரால் தங்கள் வாழ்க்கை செலவில் வழங்கப்படும் முன்னோடி சேவையானது நாட்டில் நிலவும் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு பெரும் ஒத்தாசையாக அமையும்.

அதேபோல், தேசிய பேரழிவுகள், அவசரநிலைகள் மற்றும் இயற்கை பேரழிவுகள் போன்றவற்றில் இயல்பு நிலையை மீட்டெடுக்க இராணுவம் பெரிதும் உதவியது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எந்தவொரு மோதல் நாட்டில் ஏற்படும் போது இராணுவத்தினரது உதவியை நாட்டு மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஆகவே நம்முடைய நற்பெயரையும் நாம் கட்டிக்காத்து வந்து சிறந்த நாமத்தையும் பாதுகாக்க நாம் அனைவரும் நம் கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும்.

தொடர்ச்சியான பயிற்சி, மேம்பட்ட தயார்நிலை, மாதிரி பயிற்சிகள் போன்றவை எப்போதுமே எந்தவொரு அவசர நிலையையும் சந்திக்கத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கும். இராணுவத்தின் பெருமை வாய்ந்த உறுப்பினர்களாக, நீங்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும், முன்மாதிரியான, கடின உழைப்பு மற்றும் ஒழுக்கமான இராணுவத்தின் குழுவாக பணிபுரியும் போது உங்கள் நடத்தை தொடர்ந்து மேம்படுத்த வேண்டும்.

எந்த நாட்டிலும் முப்படையினர் ஒத்துழைப்பு நல்லெண்ணத்துடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும். அதேபோல், நாம் அனைவரும் நமது பழைய கலாசார, சமூக மற்றும் பொருளாதார மரபுகளை பாதுகாக்கும் அதேவேளையில், இன, மத பேதமின்றி, நமது தேசிய வளர்ச்சிக்காக நேரடியாக பங்களிக்க வேண்டும்.

இராணுவத்தளபதியாக, அனைத்து விசேட தேவையுடைய போர் வீராங்கனைகள் மற்றும் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த படையினரது குடும்ப உறுப்பினர்களின் நலன்களை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றேன்.

### உயிர்த்தியாகம் செய்த அனைவரையும் நினைவு கூறுகிறேன்

இந்த நேரத்தில், அதிகாரிகள், பிற அணிகள் மற்றும் சிவில் ஊழியர்களின் உறுப்பினர்கள் உட்பட தாய்நாட்டின் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த அனைவரையும் இத்தருணத்தில் நான் நினைவுகூருகிறேன். அவர்களின் உறவினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்த நலன்புரி வசதிகளைப் பெறுபவர்களாக இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் உங்கள் தொழிலுக்கு உத்தரவாதம் அளிக்க தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுத் தருவேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கின்றேன்.

அதேபோல், உங்கள் தொழில் முறை பதவி உயர்வுகளை சரியான நேரத்தில் வழங்குவது தொடர்பான வழிமுறைகள் ஏற்கனவே தொடர்புடைய பிரிவுகளுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் வெளிப்படுத்த வேண்டும். குறிப்பாக, இந்த 70 ஆவது ஆண்டுவிழாவின் இராணுவ வரலாற்றில் முதன்முறையாக மொத்தம் 210 அதிகாரிகளுக்கும் 7,000 பிற தரவரிசைகளும் பதவி உயர்வுகளை வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இராணுவ வீரர்கள் அனைவருக்கும் ஒரு நல்ல மனநிலையைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று நான் நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## மாடியிலிருந்து தவறி வீழ்ந்த அவுஸ்திரேலிய பிரஜை பலி!

(கொழும்பு)

கொழும்பு, யூனியன் பிளேஸ் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றின் 3 ஆவது மாடியிலிருந்து நேற்றுக் காலை தவறி வீழ்ந்த அவுஸ்திரேலியப் பிரஜையொருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். 52 வயதுடைய சுற்றுலாப் பயணியொருவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

## ரயிலுடன் யானை மோதியதால் தற்காலிகமாக சேவை பாதிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்புக்கும் பொலநறுவைக்குமிடையிலான ரயில் சேவையானது தற்காலிகமாக பாதிப்படைந்ததாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட "மீனகயா" என்ற ரயிலுடன் யானை மோதியதன் காரணமாகவே இவ்வாறு குறித்த பகுதிகளுக்கிடையேயான ரயில் சேவை பாதிப்படைந்தது. (இ-7)

## ஆவணக்காப்பகத்தின் 68 ஆவது நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 68 ஆவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சமகாலக் கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம், 199 கோவில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் நடைபெறும். இதில் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் காண்பியக் கலைஞரான திசத் தொற டெனியவின் "2014 இற்குப் பிறகு" என்னும் தலைப்பிலான உரை இடம்பெறும் என இலங்கை ஆவணக் காப்பக முகாமையாளர் அறிவித்தார். (இ-2)

## வீதிப்பாதுகாப்பு வார நிறைவு நாள் நாளை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகம், வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் வீதிப்பாதுகாப்புச் சபை இணைந்து நடத்தும் வீதிப்பாதுகாப்பு வார நிறைவு நாள் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும். (இ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 280 | 260 | 400 |
| தக்காளி | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 60 |
| கோவா | 140 | 80 | 120 |
| கரட் | 130 | 120 | 140 |
| பூசணி | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 70 | 120 |
| வாழைக்காய் | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 240 |
| பெரிய வெங்காயம் | 280 | 190 | 200 |
| பாகற்காய் | 360 | 260 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 140 | 120 |
| லீக்ஸ் | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 90 | 70 | 100 |
| கறிமிளகாய் | 180 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 190 | 240 |
| கத்தரிதம்புள்ள | 90 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 36 | 30-50 |
| இராசவள்ளி | — | 160 | — |
| வெங்காயப்பூ | 180 | — | — |
| முள்ளங்கி | 100 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 35 | 30 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 20 |
| ஈரப்பலா | 100 | 140 | 80 |

# சிறுவர் அரங்கம்

## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

# அப்பா சொன்ன புதையல்



சோம்பேறிப் பிள்ளைகளுக்கு எது சொத்து என்று உணர்த்துவதற்காகப் புதையல் இருப்பதாகச் சொல்லி நிலத்தைத் தோண்ட வைத்து, பண்படுத்தி, பயிரிடச் செய்தார் தந்தை.

ஓர் ஊரில் உழவன் ஒருவன் வாழ்ந்து வந்தான்.

அவனுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருந்தது. ஒரு சிறிய குடிசை. இரண்டு எருதுகள். இவைதான் அவன் சொத்துகள்.

நிலத்தை உழுது பயிரிட்டு அதிலிருந்து கிடைக்கும் தானியத்தைக்கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தான்.

விவசாய வேலை இல்லாதபோது ஏதேனும் கூலி வேலை செய்வான்.

அவனுக்கு இரண்டு மகன்கள். ஒருவன் பெயர் முருகன். இன்னொருவன் பெயர் பழநி.

இருவரும் ஆரம்பப்பள்ளியுடன் படிப்பை முடித்துக்கொண்டனர்.

விவசாயி எவ்வளவோ புத்திசொல்லியும் அவர்கள் நிலத்திற்குச் சென்று வேலை செய்வதில்லை. சோம்பித் திரிந்தனர்.

விவசாயிக்கு வயதாகி விட்டது. அவன்தன் மகன்களின் எதிர்காலம் பற்றிக் கவலைப்பட்டான். தன் மகன்களைக் கூப்பிட்டான். அருகில் உட்காரும்படி சொன்னான்.

அவர்களும் உட்கார்ந்தனர்.

''எனக்கு வயதாகிவிட்டது. இனி என்னால் நிலத்தில் வேலை செய்ய இயலாது. உங்கள் அம்மாவுக்கும் வயதாகிவிட்டது. எனக்குப் பிறகு நீங்கள்தான் அவளைக் காப்பாற்ற வேண்டும்

நேற்று தூங்கும்போது ஒரு கனவு கண்டேன். நம் நிலத்தில் ஒரு புதையல் இருப்பதாக ஒரு பெரியவர் தோன்றிக் கூறிவிட்டு மறைந்துவிட்டார்.

அந்தப் புதையலை எடுக்க வேண்டுமானால் நிலத்தை முழுவதும் தோண்டிப் பார்த்தால் கிடைக்கும்'' என்று சொல்லி உயிர் துறந்துவிட்டார்.

அதுவரை ஊரைச் சுற்றிக்கொண்டிருந்த இருவருக்கும் புத்தி வந்தது! பசியைப் போக்க வேண்டுமென்றால் உணவு வேண்டும். உணவுவாங்கப் பணம் வேண்டும். பணத்திற்கு எங்கு போவது?

''அப்பா சொன்னபடி நிலத்தைத் தோண்டிப் பார்க்கலாம். புதையல் கிடைத்தாலும் கிடைக்கும். இதை இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். யாருக்கும் வெளியில் சொல்லக் கூடாது. நாளை அதிகாலையிலேயே போய் நிலத்தைத் தோண்டலாம்'' எனத் தீர்மானித்தனர்.

மறுநாள் முதல் ஆளுக்கு ஒரு ஏக்கராக நிலத்தைக் கிளறும் வேலையில் ஈடுபட்டனர்.

கீழ்மண் மேல் மண்ணாகப் புரட்டப்பட்டது. புதையல் ஒன்றும் கிடைக்கவில்லை!

''அப்பா சொன்னது தப்பா'' என்று எண்ணினர். தந்தை தங்களை ஏமாற்றிவிட்டதாகவும் எண்ணினர்.

மறுநாள். “விவசாயம் செய்தால்தான் சாப்பாடு” என்னும் முடிவுக்கு வந்தனர்.

அந்த வருடம் நல்ல மழை பெய்தது. கொஞ்சம் கடன் வாங்கி, விதை நெல் வாங்கி வந்தனர்.

நெல்லை விதைத்தனர். மாட்டுச் சாணம், தழை, உரம், குப்பைகள் போட்டனர்.

அந்த ஆண்டு அமோக விளைச்சல்.

“அப்பா சொன்ன புதையல் இதுதான் போலும்!” என நினைத்தனர்.

ஆண்டுதோறும்அமோக விளைச்சல்.

அவர்கள் இப்போது யாரிடமும் சாப்பாட்டுக்குக் கையேந்தவில்லை.

தம்மிடம் கையேந்தி வருபவருக்கும் உணவு கொடுத்தனர்.

உழவுத் தொழிலின் சிறப்பும் இதுதான் என்பதை உணர்ந்தனர்.

## ஆட்டுக்குட்டி



துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
துணிந்து வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவையா?
பாடம் சொல்லித் தருவையா?

கள்ளம் இல்லை உன்மனத்தில்
கபடம் இல்லை உன்மனத்தில்
பள்ளம் மேடு எதுவந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி

தொல்லை இல்லா ஆட்டுக்குட்டி
தோல் கறுத்த ஆட்டுக்கட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையே
சுற்றி வரும் ஆட்டுக்குட்டி

## பெட்டிக்கடை

பெட்டிக்கடை ஒன்றில் மூன்று சிறுவர்கள் போட்டி போட்டுக்கொண்டு பொருட்களை வாங்க முன் வந்தனர்.

வினாயகம் என்ற சிறுவன் கற்பூரம் வாங்க வந்தான். சகாயம் என்ற சிறுவன்மெழுகுவர்த்தியை வாங்கிட வந்தான். பக்ரின் என்ற சிறுவனோ ஊதுவர்த்தியினை வாங்க வந்தான்.

அவர்களுக்குள் யார் முதலில் பொருட்களை வாங்குவதென்ற போட்டி எழுந்தது. அதனால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர்.

கடைக்காரர் அவர்களை நோக்கினார். “நீங்கள் மூவருமே வெவ்வேறு இடத்திற்குச் செல்கின்றீர்கள்! கற்பூரம் வாங்கியவர் கோயிலுக்குச்செல்கின்றார். மெழுகுவர்த்தி வாங்குபவர் சேர்ச்சுக்குச் செல்கின்றார். ஊதுவர்த்தி வாங்குபவரோ மசூதிக்குச் செல்கின்றார். ஆனால்



நீங்கள் வாங்க வந்த இந்த மூன்று பொருட்களிலும் ஒரு ஒற்றுமையிருக்கின்றது தெரியுமா?'' என்றார்.

''அதென்ன ஒற்றுமை'' என மூவரும் அவரைப் பார்த்துக் கேட்டனர்.

''இந்த மூன்று பொருட்களும் நெருப்பில் எரிந்து புகையாக காற்றுடன் கலக்கின்றது. அந்தக் காற்றைத் தான் நீங்கள் மூவருமே சுவாசிக்கின்றீர்கள். எல்லோர்க்கும் ஒரே காற்று போல் இறைவனும் ஒருவர்தான். ஆனால் நாம் வணங்கும் முறை தான் மாறுபடுகிறது. நீங்கள் மூவருமே ஒற்றுமையுடன் இறைவனை வணங்கினால் அதன்பலன் இன்னும் அதிகரிக்கும். உங்கள் பிரார்த்தனையும் எண்ணங்களும் நிறைவேறி மத ஒற்றுமையும் ஏற்படும்'' என்றார்.

அதனைக்கேட்டமூவரும் மனம் திருந்தி தங்கள் தவறை உணர்ந்தார்கள்.

**கருத்து:- இறைவன் ஒருவர் தான். ஒற்றுமையே அவரை அடையும் சிறந்த வழியாகும்.**

ஒரு துளி மை பத்து லட்சம் பேர்களை சிந்தனை செய்யத் தூண்டக் கூடியது.
–கார்பீல்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யுத்த காலப் பயங்கரம்போல் ஆகிவிட்ட வீதிப் போக்குவரத்து

வீதிப் போக்குவரத்துத் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற முயற்சியில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

இதற்காக வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வு வாரத்தை அறிவித்து விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய நடவடிக்கையை ஆளுநர் அலுவலகம் ஆரம்பித்திருப்பதை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு, வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளைப் பொது அமைப்புகள் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

அப்போதுதான் வீதி விபத்துக்களைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

இப்போதெல்லாம் எங்கள் வடபுலத்தில் வீதி விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

வீட்டில் இருந்து வீதியில் இறங்கினால் மீளவும் வீட்டுக்குச் செல்ல முடியுமா? என்ற ஏக்கம் எங்கும் பரவும் அளவில், யுத்த காலப் பயங்கரம் போல விபத்து மரணங்கள் மக்களின் மனங்களைப் பதற்றமடைய வைத்துள்ளது.

ஆம், இன்றைய எங்கள் இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் வீதி விதிமுறைகள் பற்றி இம்மியும் கவனம் செலுத்துவதாக இல்லை. வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என்பதற்கு அப்பால்; அதிவேகத்தில் வாகனங்களை ஓட்டுதல், தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளை ஓட்டுதல் என்றவாறான சம்பவங்களும் கணிசமாக நடந்தாகிறது.

இது தவிர, வாகனம் செலுத்துவது தொடர்பில் அடிப்படை விதிமுறைகளைக்கூடத் தெரியாமல் இருந்துவிட்டு விபத்துக்கள் நடக்கின்ற சந்தர்ப்பத்தில் அல்லது விபத்து ஏற்படப் போகிறது என்ற கட்டத்தில் சண்டித்தனத்தில் ஈடுபடுகின்றதான செயற்பாடுகளும் மலிந்துள்ளன.

இவை தொடர்பில் பலரும் வேதனைப்படுகின்றனராயினும் என்ன செய்ய முடியும் என்ற கட்டத்தில் எதுவும் பேசாமல் நம் பாட்டில் இருப்போம் என்ற ஒதுங்கிக் கொள்ளும் கட்டத்துக்கு மக்களைக் கொண்டு வந்துவிட்டது.

இதன்காரணமாக வீதி விபத்துக்கள் நாளுக்கு நாள் பெருகி உயிரிழப்புக்களும் அங்கவீனமாகுதலும் கணிசமாக நடந்தாகிறது.

உண்மையில் வடபுலத்தில் நடந்த வீதி விபத்துக்களைத் தொகுத்தும் பகுத்தும் ஆராய்ந்தால், பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்கான மஞ்சள் கோட்டுப்பகுதியில்தான் விபத்துக்கள் அதிகம் நடந்துள்ளது.

பாதசாரிகள் மஞ்சள் கோட்டுப்பகுதியால் வீதியைக் கடக்கும்போது, அவர்களை மோதித் தள்ளுகின்ற அளவிலேயே எங்கள் சாரத்தியம் இருக்கிறது எனும்போது வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை வருடந்தோறும் போதித்தால் கூடத் தகும்.

அதிலும் குறிப்பாக மாணவர்களுக்கு வீதி நடைமுறைகளைக் கற்றுக் கொடுப்பதானது மிகமிக அவசியமானது.

எனவே வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் தத்தம் இடங்களில் ஏற்படுத்த வேண்டும்.

இது விடயத்தில் அதீத கருசனை கொள்வது மனித உயிர்களைப் பாதுகாக்கும் புண்ணிய செயலாகும்.

### அனைத்துத் திருடர்களையும் தோற்கடித்து

# சிறந்த அரசை உருவாக்குவதே மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு

### ஜே.வி.பி செயலாளர் விஜித ஹேரத்

(கொழும்பு)

அனைத்து திருடர்களையும் தோற்கடித்து, சிறந்த அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என்பதே மக்களின் தற்போதைய எதிர்பார்பாக உள்ளதென மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். விஜித ஹேரத் மேலும் கூறியுள்ளதாவது,

"ராஜபக்ஷ ஆட்சியில் மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டு அதிகம் காணப்பட்டது.

இதனை நிறுத்துவதாக கூறியே நல்லாட்சி என்ற பெயரில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், அது நடக்கவில்லை. இவர்கள் வழக்கம் போல மோசடி, ஊழல்களிலேயே ஈடுபட்டனர்.

ஆகையால் தற்போதுள்ள புதிய திருடர்களையும் பழைய திருடர்களையும் தோற்கடித்து இலங்கை அரசியலில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆகையாலேயே இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதற்காக நாமும் களமிறங்கியுள்ளோம்.

மேலும் நாட்டை சிறந்த பாதையை நோக்கி கொண்டுச்செல்வதற்காக திசைக் காட்டி சின்னத்தை தேர்வு செய்துள்ளோம்.

அதனடிப்படையில் மக்களையும் சிறந்த பாதையை நோக்கி கொண்டுசெல்வோம். அதற்காக மக்களும் தங்களுக்கு ஆதரவை வழங்க வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# சஜித் வெற்றியடைந்தால் மாத்திரமே சுதந்திரக் கட்சி பாதுகாக்கப்படும்

### பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர

(கொழும்பு)

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலினை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெறுவார்கள் என்பதை தீர்மானிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

எல்பிட்டி தொகுதி என்பது மிகச்சரியாகக் கூறுவதென்றால்மத்திய கொழும்பு ஆசனத்தைப் போன்றதாகும். எந்தவொரு அரசாங்கத்திலும் மத்திய கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே வெற்றிபெற்றிருக்கிறது. அதேபோன்று எல்பிட்டி தொகுதியில் எதிரணியினர் தான் வெற்றி பெறுவார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

நாங்கள் அந்தத் தொகுதியில் தோல்வியடைவோம் என்பதும் அறிந்த விடயமே. எனினும் சிறியளவிலான இந்தத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதைத் தீர்மானிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.தந்தை இருக்கும் இடத்திற்கே மகனையும் அனுப்பிவிடுவோம் என்று விமல்வீரவன்ச மிகவும் தவறான கருத்தொன்றைக் கூறியிருந்தார். இவ்வாறு பிறரை அச்சுறுத்தி, வன்முறைகளைப் பிரயோகித்து அரசியல் செய்வதே அவர்களுடைய பழக்கமாகும்.

ஒருவேளை கோத்தபாய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியடைந்தால் அவருக்கு எதிராகப் பேசுகின்றவர்களின் வாயில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவார்கள். அவ்வாறானதொரு சூழ் நிலையே தற்போது இருக்கின்றது.

இம்முறை தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றியடைந்தால் மாத்திரமே சுதந்திரக்கட்சி பாதுகாக்கப்படும். ஏனெனில் அவர் பழிவாங்கும் குணமற்றவர் என்பதால் மீண்டும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தலைநிமிர்ந்து செயற்பட முடியும். ஆனால் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றியடைந்தால் சுதந்திரக்கட்சி என்ற பெயரை பொதுமக்கள் மறக்கவேண்டிய நிலையே ஏற்படும் என்றும் அவர் இதன்போது கூறினார். (ம)

## பல்கலை கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் கடந்த 33 நாள்கள் முன்னெடுத்த தொடர் வேலை நிறுத்த போராட்டம் இடை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வரும் திங்கட்கிழமை முதல் பணிக்குத் திரும்புவதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சம்பள உயர்வு தொடர்பில் அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் தமக்கு தீர்வெதுவும் வழங்கப்படாமையின் காரணமாக கடந்த மாதம் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

15 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 25 தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

தொடர்ச்சியாக 33 நாட்கள் கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகள் முடங்கியிருந்தன. (ம-3)

## ஜனாதிபதி வேட்பாளர் மகேஷ் சேனநாயக்கவின்

### பிரசார நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

அதற்கமைய கொழும்பில் முதலாவது பிரசார கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது. எனினும் இந்த கூட்டத்தில் மிகவும் குறைந்தளவான மக்களே கலந்து கொண்டுள்ளனர்.

பிரசார கூட்டத்திற்காக புதிய மேடை ஒன்று அமைத்து பாரியளவு மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் 150 - 200 பேர் மாத்திரமே அங்கு கலந்துகொண்டதாகவும் இதனால்முன்னாள்இராணுவ தளபதி மகேஷ் சேனநாயக்க ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நபர் மீட்பு

(பொகந்தலாவ)

மலையகத்தில் தொடரும் மழை காரணமாக நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது.

அந்த வகையில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏந்திச் செல்லும் பொகவந்தலாவ கெசல்கமுவ ஓயா பெருக்கெடுத்ததால் பொகவந்தலாவை நகரில் இருந்து கிலானி தோட்டப் பகுதிக்கு சென்ற நபர் ஒருவர் வெள்ளத்தில் இழுத்துச் செல்லப் பட்டார்.

இதன்போது குறித்த நபரை பொது மக்களும் பொலிஸாரும் இணைந்து உயிருடன் மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபையால் தோண்டப்பட்ட பாரிய குழிகளில் நீர் நிரம்பி காணப்படும் பகுதியில் மீன் பிடிக்கச் சென்று ஆபத்தில் சிக்கிய இரு இளைஞர்களையும் பொதுமக்கள் பாதுகாப்பாக மீட்டனர்.

குறித்த பகுதியில் மீன் பிடிக்க சென்ற வேளை திடீரென வெள்ள நீர் அதிகரித்ததனால் இரண்டு இளைஞர்களும் கரைக்கு வர நீண்ட நேரம் அவதியுற்ற போது சுமார் நான்கு மணித்தியாலயங்களுக்கு பிறகு குறித்த இரண்டு பேரையும் நீர் வற்றியவுடன் பாதுகாப்பாக மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடும்மழை காரணமாக காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதோடு காசல்ரீ நீர்த்தேக்கம் வான் பாயவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு 111

# இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்தும் ஹாட்லியைற்ஸ்-ஜொலிஸ்ரார் அணிகள்





சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு 111 தொடரின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை பரியோவான் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிக்கு CN வித்தியாதரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். இத்தொடரில் 15 வீரர்கள் 5 இலக்குகளைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 4 வீரர்கள் சதம் அடித்தமையும் குறிப்பிடத்தக்கது. ஹாட்லியையிற்ஸ் அணி, தகுதிகாண் போட்டிகளில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 2 இலக்குகளாலும் T.YMNA அணியை ஒரு இலக்கிலும் 2 ஆவது சுற்றில் யூனியன்ஸ் அணியை 3 ஓட்டங்களாலும் கால் இறுதியில் ஓல்டகோவ்ஸ் அணியை 115 ஓட்டங்களாலும் அரையிறுதிப் போட்டியில் விங்ஸ் அணியை 1 இலக்கிலும் வெற்றி பெற்று மாவட்ட ரீதியில் இறுதிப் போட்டிக்கும் மாகாண ரீதியில் 2 ஆவது சுற்றுக்கும் தகுதி பெற்றுள்ளது. ஜொலிஸ்ரார் அணி அரியாலை சென்றல் அணி 3 இலக்கினால் வெற்றியும் பற்றீசியன்ஸ் அணியிடம் 2 இலக்கினால் தோல்வியும் 2 ஆவது சுற்றில் றெயின்போ அணியை 107 ஓட்டங்களாலும் கால் இறுதியில் கே.சி.சி.சி அணியை 5 இலக்குகளாலும் அரை இறுதியில் விக்டோறி அணியை 5 இலக்குகளால் வெற்றியும் அடைந்து மாவட்டரீதியில் இறுதிப்போட்டிக்கும் மாகாண ரீதியில் 2 ஆவது சுற்றுக்கும் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## உடுத்துறை செந்தமிழ் அணி வெற்றி



கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. செந்தமிழ் அணி சார்பாக யூட் இரு கோல்களை பெற்றுக் கொடுத்தார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக யூட் தெரிவு செய்யப்பட்டார். (க)

## லீக் ஆட்டத்தில் வென்றது மயிலங்காடு ஞான முருகன்



உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற சோபநாத் ஞாபகார்த்த கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணி மோதியது .

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் ஞான்முருகன் அணி வெற்றி பெற்றது. (க)

## அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது அண்ணாசிலையடி யுத் அணி

கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சக்கோட்டை சென்.சேவியர் அணியை எதிர்த்து அண்ணாசிலையடி யுத் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 05:04 என்ற கோல் கணக்கில் அண்ணாசிலையடி யுத் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.



இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## அரையிறுதிக்கு தகுதி பெற்றது குருநகர் பாடும்மீன் அணி



உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற சோபநாத் ஞாபகார்த்த கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது .

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் பாடும் மீன் அணி வெற்றி பெற்றது. (க)

## இன்று தேர்...

வசந்த மண்டபப் பூசை இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து சக்கரத்தாழ்வார் பரிவாரமூர்த்திகளுடன் காலை 8.45 மணியளவில் தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருவார்.

தேர்த் திருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறையில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் தங்க நகை அணிவதை தவிர்த்து ஆலயத்திற்கு வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது. (ம-3,60)

## குடும்பப் பெண்...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வீட்டில் உள்ளவர்களுக்கு தேநீர் வைப்பதற்கு மண்ணெண்ணெய் அடுப்பை மூட்டியுள்ளார். கீழே இருந்த மண்ணெண்ணெய் அடுப்பை தூக்கி பிறிறொரு இடத்தில் வைக்க முற்பட்ட வேளை திடீரென மண்ணெண்ணய் அடுப்பு சுவாலைவிட்டு எரியத் தொடங்கியது.

பதற்றத்தில் மண்ணெண்ணெய் அடுப்பை கைதவறவிட்டவேளை குறித்த பெண் மீது தீப்பற்றிக் கொண்டது.

உடனே தீக்காயங்களுக்குள்ளான பெண்ணை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது குறித்த பெண் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## சென்னை - பலாலி...

டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா வரும் 17ஆம் நாள் நடக்கவுள்ளது.

இந்த நிலையிலேயே, சென்னை விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்களுக்கு வாரத்தில் 7 விமான சேவைகளை நடத்துவதற்கு, இந்திய அரசாங்கம் அலையன்ஸ் எயர் நிறுவனத்துக்கு அனுமதி அளித்துள்ளது.

பலாலி மற்றும் மட்டக்களப்புக்கான விமான சேவைகளுக்கு அலையன்ஸ் எயர் நிறுவனம், ATR 72-600 விமானங்களைப் பயன்படுத்தவுள்ளது.

அதேவேளை, பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் அடுத்த வாரம் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில், இறுதிக்கட்ட பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-3)

## வயோதிபப் பெண்...

பகுதியில் இருந்து குறித்த வயோதிபப் பெண்ணின் சடலத்தை பொலி ஸார் நேற்று வெள்ளிக்கிழமை கண் டெடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை முதல் காணாமல் போயிருந்த இந்த வயோதிபப் பெண் தொடர்பாக மாமடு பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அவரை உறவினர்கள் தேடி வந்துள்ளனர்.

நேற்றுக் காலை குறித்த பகுதிக்கு சென்றவர்கள், பேயாடி- கூழாங்குளத்தில் சடலமொன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பொலிஸாரும் உறவினர்களும் குறித்த இடத்திற்கு சென்று சடலத்தினை அடையாளம் காட்டியுள்ளனர்.

இவரது உயிரிழப்பு குறித்த மேலதிக விசாரணைகளை, மாமடு பொலிஸாருடன் இணைந்து இராணுவமும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## குற்றவாளி...

பெண் ஒருவரை கூட்டாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், 2015ஆம் ஆண்டு மூன்று இராணுவத்தினருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், தலா 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்திருந்தது.

இந்தத் தண்டனை மற்றும் தீர்ப்புக்கு எதிராக, குற்றவாளிகள் மூவரும் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் மீது ஐந்து ஆண்டுகளாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில், நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான குமுதினி விக்கிரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர், படையினர் மூவரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

அத்தோடு குற்றஞ்சாட்டப்பட்ட மூவரும் அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சாந்த சுபசிங்க, தனுஷ்க புஸ்பகுமார, பிரியந்த குமார ஆகிய மூன்று இராணுவத்தினரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

புஷ்பகுமார சார்பில் முன்னிலையாகிய சட்டவாளர் ரஞ்சித் பெர்னாண்டோ, இலங்கைப் படையினர் மீதான குற்றச்சாட்டுக்கள் ஒரு தீவிரவாத குழுவினால் வேண்டுமென்றே தீய நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டன என வாதிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாராளுமன்றத்...

மன்ற தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதற்கமைய குறித்த அறிக்கை எதிர்வரும் 23 அல்லது 24ஆம் திகதிகளில் பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவுக்குழுவின் தலைவர் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இறுதி அறிக்கையை தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதற்கமைய, சில கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மற்றுமொரு சந்திப்பு எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அனைத்து மக்...

கூட தான் விரும்பவில்லை எனவும் அவர் கூறினார்.

அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டாரவின் கொழும்பு இல்லத்தில் தமிழ்ப் புத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்று சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் நான் வென்றால் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒரே வகையில் செயற்படும் திட்டங்களையே கொண்டு வரவுள்ளேன். எல்லோருக்கும் ஒரே நீதி என்பதே எனது கொள்கை.

இனவாத ரீதியான செயற்பாடுகளுக்கு நான் இடமளிக்கமாட்டேன். எனது தந்தையார் காலத்தில் கூட நாங்கள் அனைத்து இனத்தவரையும் அரவணைத்தே செயற்பட்டோம்.

பெரும்பான்மை சிங்கள மக்களின் எண்ணப்பாட்டை மாற்ற வேண்டும். அவர்களுக்கு உண்மை நிலையைச் சொல்ல வேண்டும். அதனை நான் செய்வேன். தமிழ் ஊடகங்கள் எனது பயணத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-3)

## கோத்தாவின்...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் பொதுஜன பெரமுன காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் வாக்குகளை சிதைப்பதற்காகவே ஜனாதிபதி வேட்பாளர்கள் 35 பேர் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளனர். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்காது. ஐக்கிய தேசியக் கட்சி கூட்டங்களை நடத்துவது அவர்களது திட்டங்களையோ கருத்துக்களையோ கூறுவதற்கு அல்ல. மாறாக எம்மை விமர்சிப்பதற்காகவே கூட்டங்களை நடத்துகின்றனர். கடந்த 2015 ஆம் ஆண்டு கூறிய அதே கதைகளை தற்போதும் மீண்டும் கூற ஆரம்பித்திருக் கிறார்கள். என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## இலங்கைக்கு...

எரிபொருளை விநியோகிக்கும்.

இலங்கை பெற்றோலியத்துறை அமைச்சின் தகவல்படி உடன்படிக்கை காலத்துக்குள் சிங்கப்பூர் நிறுவனம் 92 ரக ஒக்டெய்ன் பெற்றோல் 1.9 மில்லியன் பீப்பாய்களையும் 95 ரக ஒக்டெய்ன் 476000 பீப்பாய் பெற்றோலையும் விநியோகிக்கவுள்ளது.

இந்தநிலையில் 92 ரக ஒக்டெய்ன் பெற்றோல் 3.4 அமரிக்க டொலர்களுக்கும் 95 ரக பெற்றோல் 3.8 டொலர்களுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளது. (ம-3)

## கசிப்பு உற்பத்தி...

ஹேரத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 185 கசிப்பு போத்தல்களும் உற்பத்தியில் ஈடுபட்டதன் பேரில் சந்தேகத்தில் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-3,316)

## கோத்தாவிடம்...

அந்த வரைபில்,

1. யுத்தத்தால் விதவைகளான குடும்பங்களிற்கு ஒரு வருடத்திற்கு வாழ்வாதார உதவிகள் மூலம், சுய பொருளாதாரத்தை வளர்த்து விடுதல்.
2. காணாமல்போனவர்களின் குடும்பங்களின் வீட்டுத் தேவைக்கு ஏற்ப தொழில் வாய்ப்பு, தொழில் உதவி, உதவித் தொகை வழங்கி, அவர்களின் சுய பொருளாதாரத்தை வளர்த்து விடுதல்.
3. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 வருடத்தில் 65,000 வீடுகள் அமைத்தல்.
4. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் தடுப்பு காவலில் உள்ளவர்களை விடுவித்தல்
5. யாழ் வன்முறை கலாசாரத்தை (வாள் வெட்டு) முடிவுக்கு கொண்டு வருதல்
6. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருளாதார வலயம் அமைத்தல். இதன்மூலம், உள்ளூர் உற்பத்திகளை அங்கு கொள்வனவு செய்வது.
7. வடக்கு கிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் ஆடைத் தொழிற்சாலைகளை அமைத்தல். வாகன பொருத்தும் தொழிற்சாலைகள் அமைத்தல்.
8. யாழ்ப்பாணத்திற்கு இரணைமடு குள நீரை கொண்டு வருவது.
9. வன்னியிலுள்ள மலையக மக்களிற்கு காணிகளை வழங்க வசதியாக, பொமிற் காணியில் 5 வருடம் காணியில் குடியிருந்து, காணியை பராமரித்தவர்களிற்கு அந்த காணியை வழங்குவது. காணியற்றவர்களிற்கு உறுதியை வழங்குவது.
10. யாழ் நகர வடிகாலமைப்பு வசதியை ஏற்படுத்துவது.
11. வடக்கு, கிழக்கில் 50 தொழிற்சாலைகளை அமைத்தல். அவற்றில் சில - திருகோணமலை கந்தளாய் சீனி தொழிற்சாலை, சம்பூரில் சூரிய மின் உற்பத்தி, மூதுரில் பால் உற்பத்தி நிலையம், வாழைச்சேனை காகித ஆலை, கல்குடாவில் அரிசி ஆலை, மீன் பதனிடல் நிலையம் உள்ளிட்டவை. (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2019/10/11
சீட்டிழுப்பு இலக்கம் 4025
K 0 2 8 7 0 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11-10-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2267
J 09 48 53 55
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2019.10.11
சீட்டிழுப்பு இலக்கம் - 212
F 50 55 72 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 2019/10/11
சீட்டிழுப்பு இலக்கம் 0444
F 02 28 46 57 69

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11/10/2019 வெற்றி வாரம் 2644 வர்ணம் கரு நீலம்
வெற்றி இலக்கங்கள் மேடம் 02 18 33 45
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,036,064
2019/10/12 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 758 வர்ணம் : ஊதா சீட்டிழுப்பு திகதி: 2019.10.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,412,565/-
வெற்றி இலக்கங்கள் 11 30 51 54 X
விசேட வெற்றி இல. 5539

கொவிசெத Q 28 46 62 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் 143, 346, 668/=
சீட்டிழுப்பு வாரம் 506 திகதி 11 ஒக். 2019 வர்ணம் பச்சை

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 287
சீட்டிழுப்பு திகதி 11.10.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 10 19 42 விதி எண் 02
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.45,283,832
2019.10.16 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

## ஹோட்டல் வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் சகல வசதிகளுடன் கூடிய ஹோட்டல் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 545 6420 (603)

## Super A/C VAN தேவை

வாடகைக்கு / விலைக்கு
Super A/C VAN தேவை (603)

தொடர்புகளுக்கு : 077 545 6420

## வேலையாள் தேவை

யாழ் திருநெல்வேலியிலுள்ள எமது நிறுவனத்திற்கு சமையல் செய்யக் கூடிய பெண் மற்றும் ஆண் தொழிலாளி தேவை.

தொடர்புகளுக்கு :
076 554 1472 (616)

இரண்டு மணித்தியாலத்தில்
## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்

077 9086737 (612)

GUNA BEST PC COMPUTER REPAIR
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்

## வீடு வாடகைக்கு

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையில் சிறிய குடும்பம் / படிக்கும் மாணவிகள் தங்கியிருக்கக் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
076 150 1100 / 077 614 1373 (608)

## காணி விற்பனை

1. புன்னாலைக்கட்டுவன் ஈவினையில் 61 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
2. திருநெல்வேலி முருகன் வீதியில் (இராமசாமிச் சந்தி 27 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (617)

தொடர்புகளுக்கு : 077 728 6061

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு

UK - 550/=
Germaney - 650/=
France - 700/=

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
(Tourist Visa) (615)

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528


# மரண அறிவித்தல்

## சரவணமுத்து குமாரசாமி

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர்,
யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்)



புத்தூர் வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து குமாரசாமி கடந்த 10.10.2019 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சுபத்திரையம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, இராசமணியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான முத்துசாமி, கந்தசாமி, இரத்தினசாமி, துரைச்சாமி, அருந்ததியம்மா மற்றும் சிவபாக்கியம், அண்ணாச்சாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் பாஸ்கரமூர்த்தி (நோர்வே), புண்ணியமூர்த்தி, சத்தியபாமா (ஆசிரியை- யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), கிருபாகரமூர்த்தி (ஆசிரியை - யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), பிரபாகரமூர்த்தி (பிரதேச செயலாளர் - வடமராட்சி கிழக்கு மருதங்கேணி), சத்தியறஜனி (ஆசிரியை - யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்), கானமூர்த்தி (பட்டயப் பொறியியலாளர், இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதீஸ்வரி (நோர்வே), தவக்குமார், கௌரி, சிவதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - நல்லூர்) சந்திரகோபன் (எழுதுவினைஞர், இலங்கை மின்சார சபை), தாட்சாயினி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீனா (நோர்வே), திபேரன் (நோர்வே), றதினிகா (நோர்வே), பபித்திரன், பதுமிகா, பதுமிகன், பாதுசன், பவகரன், பவநிதா, ஆர்த்திகன், ஆராதனா, மதுமிதா (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2019 திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாதரவத்தை, புத்தூர். (611) தகவல் : குடும்பத்தினர்

## மாணவனைக் காணவில்லை
### பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

உடுவிலைச் சேர்ந்த 16 வயது பாடசாலை மாணவனைக் காணவில்லையென சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அவரது பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்து நேற்று முன்தினம் முற்பகல் மருந்து எடுப்பதாகக் கூறிச் சென்ற மாணவன் நேற்று இரவு வரை வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ஜனுக்சன் (வயது - 16) என்ற கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயிலும் மாணவனையே காணவில்லை.

மாணவன்நேற்று முன்தினம் காலையில் பாட சாலைக்கு சென்று உடனேயே வீடு திரும்பியுள்ளார். தனக்கு உடல் நிலை சரியில்லை என்று தெரிவித்த அவர், மருந்து எடுத்துவிட்டு வருவதாக நேற்று முற்பகல் வீட்டிலிருந்து சென்றார். எனினும்அவர்நேற்று இரவு வரை வீடு திரும்பவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-3)


## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இருந்து இந்திய விபூதி 1 Kg பக்கற்றினை மொத்தமாக (Rs.100) இற்கும் சில்லறையாக (Rs.110) இற்கும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் விபூதி, சந்தனம், குங்குமம், 25g பக்கற் முதல் 1 Kg பக்கற் வரை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (C-7820)

தொடர்புகளுக்கு:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமையில்) தொ.பேசி: 0212222567

## கலைஞர்களுக்கான தேர்வு

வின் கிரியேசன்ஸ் (Win Creations) நிறுவனத்தினால்
தயாரிக்கப்பட இருக்கும்...
நமது பாரம்பரிய விளையாட்டில் ஒன்றான கிட்டிப்புல்லை
மையமாக வைத்து இலங்கை, இந்திய கலைஞர்
கூட்டணியில் தயாராகவிருக்கும்
மச்சி அஜினோவின் கிட்டி
திரைப்படத்திற்கான நடிகர், நடிகைகள் தேர்வு
இடம் -திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
காலம் - 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 9.30 - 2.30 வரை
தொடர்புகளுக்கு :- 077 964 8942 / 077 506 9418 (613)

## அமெரிக்க லொத்தர் விசா

2021 ஆம் ஆண்டிற்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

- 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தனியாக விண்ணப்பிக்கலாம்.
- குடும்பமாக விண்ணப்பிப்பவர்களுக்கு இரு வாய்ப்பு உண்டு.
- கடவுச்சீட்டு (Passport) உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும்.

இல் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

திருமுருகன்
கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321 K.K.S Road, Jaffna.
Thirunelvely, Nelliyadi, Colombo. 0777554528 (614)

## சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி - யாழ்ப்பாணம், வவுனியா



ரோஷினி செந்தில் - ராஜலக்ஸ்மி அனிருத்

காலம் - ஒக்டோபர் 13ம் திகதி ஞாயிறு
மாலை 3.30
இடம் - யாழ்.கே.கே.எஸ்.வீதி (பூநாறி மடம்),
செல்வா பெலஸ் (A/C)

காலம் - ஒக்டோபர் 14ம் திகதி திங்கள்
மாலை 6.30
இடம் - வவுனியா நகர சபை
கலாசார மண்டபம்

டிக்கட் 500/=,1000/= நிகழ்ச்சி அன்று மண்டபவாசலிலும் பெற்றுக்கொள்ளலாம்
வவுனியா - தொடர்புகளுக்கு - 077 311 1245 / 070 356 8333
யாழ் - தொடர்புகளுக்கு - 077 4718 969 / 071 381 5114
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு K.T. பிரசாத் (C-7794)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் (2019) தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற

க.சந்தோஷன் – 171 (யா/ ஜோன் பொஸ்கோ)
ஜே.ஜோயல்ஷன் – 163 (யா/ ஜோன் பொஸ்கோ)

ஆகியோரையும் மேலும் யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் வாழ்த்துவதோடு எமது ஊரைச் சேர்ந்த

ம.கார்த்தீஹன் – 183 (யா/ நவாலி சென் பீற்றேஸ்)
பா.பிருத்திவா – 153 (யா/ மா. விவேகானந்தா)

ஆகியோரையும் மேலும் எம் ஊரைச் சேர்ந்த சித்தியடைந்த ஏனைய மாணவச் செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு கல்வியில் மேன்மேலும் சிறந்த பெறுபேறுகளை பெற்று சிறந்த கல்விமான்களாக மிளிர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் - ஷண் பாடசாலை சேவை
வலம்புரி T.C, நவாலி., (C-7853)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.